"மாலை மணி"

சந்தா விபரம்

ஆண்டுஒன்றுக்கு ரூ. 24-0-0
ஆறு மாதத்திற்கு ரூ. 12-0-0
மூன்றுமாதத்திற்கு ரூ. 6-0-0
ஒரு மாதத்திற்கு ரூ. 2-2-0
சென்னைக்குமட்டும் ரூ. 2-0-0

Regd. No. M. 5458 — விலை அணா ஒன்று — இலங்கை 10 சதம்

மாலை மணி

[illegible] "அறிவாலயம்"
25/6, திருவள்ளுவர் குடியிருப்பு, [illegible]
'MALAI MANI'
Tamil Daily

(திராவிடர் தமிழ்த் தினசரி கருத்திதழ்)

ஆசிரியர்: மு. கருணாநிதி

Telephone: No. 4502

"மாலை மணி"

விளம்பர விகிதம்

ஒரு அங்குலம் [illegible] திற்கு ரூ. 5.

நீடித்த விளம்பரங்களுக்கு விண்ணப்பித்துக்கொள்ளவும்.

மானேஜர்

மலர் 3 | சென்னை 21-12-51 வெள்ளி ★ வெளியூர் 22-12-51 சனி | மணி 131

மதுவிலக்குதிட்டம்தோல்வியடைந்தன

அவசரப்பட்ட அரசாங்க செய்கை திருத்தப்படுமாம்?

காலால் வருமானம் ஈடு செய்ய மக்களுக்கு வரிச்சுமையா?

காங்கிரஸ் ஆட்சிக்கு வந்த உடன் மது விலக்கை உடனே அமுலுக்குக் கொண்டு வந்தனர். இதனால் ஆட்சியாளர்களுக்கு கிடைக்கக் கூடிய வருமானம் சுமார் 17-கோடி ரூபாய் துண்டு விழுந்தது. இதைச் சரிகூட்ட விற்பனை வரியை ஒன்றுக்கு மூன்றாக உயர்த்தினர். மற்றும் பல வரிகளையும் மக்கள் தலையில் தாங்கமுடியாத சுமையாக்கி விட்டனர் என்றாலும் மதுவிலக்கு நம்முடைய மாகாணத்தைப் பொருத்தவரையில் வெற்றி பெற்றதாகக் கூறமுடியாது. மது விலக்கு சம்மந்தமாக கமிட்டி உறுப்பினர் கூறும் விசித்திர வாதத்தை கீழே தந்துள்ளோம்,

சென்னை, டிச 20—

உலக விவகார இந்தியாகவுன்சில் சென்னை கிளையின் ஆதரவில் நேற்று மாலை நடைபெற்ற கூட்டத்தில் மத்தியப் பிரதேசத்தில் மதுவில[illegible] என்பது பற்றி [illegible] கமி[illegible] [illegible] கோத[illegible] [illegible]ப்சுவையில் மதுவிலக்குக் கொள்கை மிக மிகச் சிறந்த கொள்கை யென்றும் மதுவிலக்கைவிட தனிப்பட்டவர்களுக்கு மதுவை ரேஷன் செய்து கொடுக்கும்முறை அதிக வெற்றிகரமாக இருக்குமென்பது தம் சொந்த அபிப்பிராயமென்றும் கூறினர்.

தோழர் கோதண்டராவ் மது விலக்கு கொள்கை சிறந்ததென்றும் கூறியதோடு இல்லாமல் மதுவிலக்கைகை விட வேண்டுமென்றும், அதற்கு ப[illegible] மதுவை தனிப்பட்டவர்களு[illegible] ரேஷன் செய்து கொடுக்க வேண்டுமென்றும் தனது அபிப்பிராயம் என்று கூறினர்.

தோழர் கோத[illegible]ராவ் இதை விட [illegible] கல்வியுற்ற [illegible] யாகவே ஒப்புக் கொண்டிருக்கலாம். ராவ் கூற்[illegible] பிரகாரம் மதுவிலக்கு வெற்றி பெற்றிருந்தால் மதுவை ரேஷன் செய்து கொடுக்க வேண்டிய அவசியம் ஏன் வ[illegible] வேண்டும். ஆகவே-காங்கிரஸ் சர்க்கார் உருப்படாத பல திட்டங்களைக் கொண்டு வந்து தோல்வியுற்றதைப் போல் மதுவிலக்கும் இம் மாகாணத்தைப் பொருத்தவரையில் தோல்வியடைந்துள்ளதென்பதற்கு நாம் பல சான்றுகளைக் கூறுவே[illegible] மது விலக்குக்கு மு[illegible] குறிப் [illegible] கிடைக்குமென்றிருந்த[illegible] பதிலாக கள்ளச் சாராயம் கண்ட கண்ட இடங்களில் கிடைப்பதுமட்டுமல்லாமல் இதன் சம்பந்தமான [illegible] களில் தினமும் நூற்றுக்கணக்கில் விசாரிக்கப்பட்டு வருகின்றன. ஒரு ரூபாய்க்கு கள்ளச் சாராயம் குடிப்பவன் கோர்ட்டில் 10 ரூபாய் அபராதம் செலுத்துகிறன் என்றால் எப்படி அவனுடைய பொருளாதார நிலைமை சிர்கெட்டதாகக் கூறமுடியும். ஆகவே அமுல் நடத்தத் தெரியாத திட்டத்தை அவசரப்பட்டு கொண்டு வந்து அரசாங்கம் திண்டாடுகிறது என்றே கூறலாம்,

சிறு பெண் டாக்டர் வேலூர் வருகை

வேலூர், டிச, 20—

வேலூர் செஞ்சிலுவைச் சங்க குழந்தைகள் நல ஸ்தாபனத்துக்கு உலக சுகாதார ஸ்தாபனத்தைச் சேர்ந்த திருமதி டாக்டர் ஜென்லேன்ஷீ சென்ற வெள்ளியன்று விஜயம் செய்தார் ஏ பார்த்தசாரதியும் என். கே. விஜயராகவனும் அவரை வரவேற்றனர். நகரில் தொத்து வியாதிகளை தடுக்க செய்யப்பட்டிருக்கும் ஏற்பாடுகள் குறித்து நகர சபை சுகாதார அதிகாரியுடனும், சபைத் தலைவருடனும் அவர் சம்பாஷித்தார் நகர சபையால் நடத்தப்படும் குழந்தைகள் நல ஸ்தாபனத்தைவும் சர்க்கார் ஆஸ்பத்திரிக்கும் விஜயம் செய்தனர், சர்க்கார் ஆஸ்பத்திரியில் அவரை ஜில்லா சுகாதார அதிகாரி வரவேற்று ஆஸ்பத்திரியின் பல்வேறு இலாகாக்களை காட்டினர். நாட்டின் தொத்து வியாதி எதிர்ப்பு ஏற்பாடுகளை அவர் பாராட்டினர்.

4,000 இந்திய மாணவர்கள் ?.

பிரட்டனில் தங்குவதற்கு வசதி அளிக்க ஏற்பாடு

லண்டன். டிச. 20-

சென்ற 12 மாதங்களாய் பிரிட்டனுக்கு கல்வி பயில வரும் இந்திய மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டே வருகிறது. இந்தியக் காரியாலயத்தின் கல்வி இலாகா, பிரிட்டனில் சுமார் 2,700 மாணவர்கள் இருப்பதாகக்கூறுகிறது. ஆனால் 4,000 பேர்கள் இருக்கலாம் என்றும் கருதப்படுகிறது.

என்றும் இது ரெகார்ட் எண்ணிக்கை என்றும், சென்ற உலக யுத்தத்திற்குமுன்பு இருந்த தொகையைக்காட்டிலும்மிகவும் அதிகரித்திருப்பதாகவும் கூறப்படுகிறது

இம்மாணவர்களில்இரண்டில் மூன்று பங்கு லண்டன் புறத்திலும் மற்றவர்கள்; மான்செஸ்டர், எடின்பரோ, லீட்ஸ், ஷெப்பீல்ட்டு, பிரிஸ்டல், ஆக்ஸ்போர்டு கேம்பிரிட்ஜ், [illegible] [illegible] னர்.

இவர்கள் தங்குவதற்குவேண்டிய வசதிகள் அளிக்க அநேக திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன

இவைகளில் முக்கியமானது அடுத்த கோடை முடிவிற்குள் சுமார் 100 000 பவுன் செலவில் லண்டனில் பிட்ஸ்ராய்தெருவில் இந்திய மாணவர்கள் யூனியன் ஹாஸ்டலுக்கு புதிய கட்டிடம்.

ஆறு மாடிகள் இப் புதிய கட்டிடத்தில் உள்ளன. பிரிட்டிஷ் திவி விஷாவில் "டோம் ஆப் டிஸ்கவரி" என்பதை டிசைன் செய்துள்ள ரால்ப் டப்ஸ் என்பவர்தான் இக்கட்டிடத்திற்கும் டிசைன் போட்டுள்ளார்.

இந்திய மாணவ யூனியனின் வார்டன் குளோப் கிருபரிடம் கூறியதாவது:—

1951 வருஷம் மட்டும் பிரிட்டனுக்கு அபரிமிதமாக மாணவர்கள் வந்த ஆண்டு என்று குறிப்பிடவேண்டும் 1946லிருந்து யூனியன் அநேக கஷ்டங்களுக்கு உட்பட்டது எனினும் யூனியனின் ஹாஸ்டலில் மட்டும் தற்காலிகமாக 1,500 மாணவர்கள் தங்குவதற்கு வசதி தரப்பட்டுள்ளது.

வ. உ. சி. கழகம்

நுங்கம்பாக்கம் வ. உ. சி கழக முதலாண்டு விழா டிசம்பர் 23, 24, 25-ம் நாட்களில் அவன்யூ ரோடு எதிர் திறந்த வெளியில் அமையும் அணி பெறு "எம். சி. ராஜா பந்தலில் நடைபெறும். மூன்று நாள் விழாவுக்கும் முறையே தோழர்கள் இரா. நெடுஞ்செழியன் எம். ஏ., புலவர் அன்பு கணபதி, க அன்பழகன் எம். ஏ. ஆகியோர் தலைமை யேற்பார்கள்.

தமிழ்ப் பெரியார் திரு. வி. க. அவர்கள் துவக்கவிழாச் சொற்பொழிவாற்றுவார்கள்

விழா நாள்தோறும் மாலை 4-மணியளவில் துவக்கப்பெற்று 6 மணிவரை இசையரங்கும்; பின்னர் இரவு 9 மணிவரை சொற்பொழிவும், மூன்றாம் நாளன்றிரவு நாடகமும் நடைபெறும்.

நிகழ்ச்சி நிரல்

23-12-51 மாலை 4 மணி முதல் 6 வரை தமிழ் இசை இசைச் செல்வி ஜி. கஸ்தூரி 6 முதல் 9 வரை சொற்பொழிவு துவக்கவிழாச் சொற்பொழிவு; தமிழ்ப் பெரியார் திரு. வி. க. விழாத் தலைவர்; தோழர் நெடுஞ்செழியன் எம். ஏ.

24—12—51 மாலை 4 மணி முதல் 6 வரை தமிழ் இசை. இசை வேந்து எம். எம். முத்து அவர்கள் சொற்பொழிவு: விழாத் தலைவர்: புலவர். அன்பு கணபதி.

25—19—41 மாலை 4 மணி முதல் 9 வரை தமிழ் இசை: இசையரசு முனமணி அவர்கள 6 மணி முதல் 9 வரை சொற்பொழிவு: தோழர் க அன்பழகன் எம். ஏ. இரவு 9-30 மணிக்கு நாடகம்: "மாலையில் சோலை" மூன்று நாள் நிகழ்ச்சிகளிலும் தோழர்கள் மு. கருணாநிதி, காஞ்சி கலியாணசுந்தரம், காஞ்சி மணிமொழியார், என். வி. நடராசன். டி. டி. அரசு, தோழியர் சத்தியவாணிமுத்து முதலியோர் கலந்து கொள்வார்கள்.

நகைச்சுவையரசு என். எஸ். கிருஷ்ணன், இசையரசு எம். எம். தண்டபாணி தேசிகர், கடிப்புலவர் கே. ஆர். ராமசாமி ஆகியோர் விழாவின் சிறப்பு விருந்தினராயிருந்து குழுவினரை மகிழ்விப்பர்,

ஐ. நா. பந்தோபஸ்து கவுன்சில்

பாரிஸ், டிச 20—

ஐ. நா பந்தோபஸ்து கவுன்சிலுக்கு இன்று கிரீஸ் 19-வது தடவையாக வாக்கெடுக்கப்பட்டபோது தேர்ந்தெடுக்கப்பட்டது. அதனை எதிர்த்து வைபேர் ரஷ்யா தோற்றது. ஆக தேர்ந்தெடுக்கப்பட்ட ஸ்தானங்களில் ஒரு கம்யூனிஸ்டு அனுதாப தேசம்கூட இப்போது பந்தோபஸ்து கவுன்சில் இல்லை.

கவர்னர் ராஜினமா

நேர்தலை நடத்தும் விஷயத்தில் தகராறு

டெஹ்ரான் டிச 20—

பாரசிகத்தில் பொதுத் தேர்தலை நடத்தும் விஷயமாக சர்க்காருக்கும், டெஹ்ரான் கவர்னருக்கு மிடையே அபிப்பிராய பேதம் ஏற்பட்டதன் விளைவாக டெஹ்ரான் கவர்னர் ஆஷ்தாரி தமது பதவியை ராஜினாமா செய்தார், மேற்படி கவர்னர் பதவி யேற்று சில தினங்களே ஆகின்றன.

330 கம்யூனிஸ்டு விடுதலை

சமஸ்தான அதிகாரி தகவல்

ஹைதராபாத், டிச. 20—

சென்ற 2 வாரகாலத்துக்குள் ஹைதராபாத் சமஸ்தான சிறையிலிருந்து மொத்தம் சுமார் 330 கம்யூனிஸ்டு காவற் கைதிகள் விடுதலை செய்யப்பட்டனர் என்று சமஸ்தான அதிகாரியொருவர் இன்று அறிவித்தார்.

சமஸ்தானத்திலுள்ள கம்யூனிஸ்டு காவற்கைதிகளில் 600 பேர்களின் நிலைமை தற்போது பரிசீலிக்கப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார். அவர்களில் 300 பேர்களின் விஷயமாக பரிசீலனை பூர்த்தியாகிவிட்டது என்றும், அந்த 300 பேர்களில் 160 பேர் நிபந்தனையின்றி விடுதலை செய்யப்பட்டனர் என்றும் அவர் சொன்னார். பரோலில் விடுதலையான சில கைதிகளை மட்டும் நிபந்தனையின்றி விடுதலை செய்ய இயலவில்லை என்றும் அந்த அதிகாரி கூறினார்.

கம்யூனிஸ்டு காவற் கைதிகளின் நடத்தைகள் அபிவிருத்தியடைந்து வருவதாக தகவல்கள் கிடைத்தால் கைதிகளில் மேலும் பலர் விடுதலை செய்யப்படுவர் என்று அவர் கூறினார்.

ஜெர்மனிய தேர்தல்

கமிஷன் அமைக்க ஐ. நா. கமிட்டி முடிவு

பாரிஸ், டிச 20—

அகில ஜெர்மானிய தேர்தலை நடத்துவதற்கு உள்ள நிலைமையைப் பரிசீலிப்பதற்காக பாரபட்சமற்ற கமிஷன் ஒன்றை அமைக்க ஐ. நா. அரசியல் கமிட்டி தீர்மானித்தது.

பாடியாலவில் போலீஸ் சோதனை

2 அச்சகங்களுக்கு சீல் வைக்கப் பட்டன

பாடியாலா, டிச. 19—

நேற்றிரவு ஞர்மண்டியில் மக்கள் ஜனநாயக முன்னணியின் தேர்தல் தலைமைக் காரியாலயத்தைப் போலீஸார் சோதனை செய்தனர். ஒரு மணி நேர சோதனைக்குப் பிறகு ரகவீர் சிங் காங்கிரஸ் மந்திரி சபைக்கு முடிவு கட்டுங்கள் என்று உருது பாஷையில் உள்ள சுவரொட்டி விளம்பரப் பிரதிகளைக் கைப்பற்றினர்.

பின்னர் பாடியாலாவில் இரண்டு அச்சகங்களுக்கு சீல் வைத்தனர்.

கலகக்காரர்கள் சுரங்கங்களை கைப்பற்றினர்

ரங்கோன், டிச. 20—

கேரன் கலகக்காரர்களும் ஸயாம் கொள்ளை கூட்டத்தினரும் பர்மா ஸயாம் எல்லையில் உள்ள சேமியின் தகரச் சுரங்கத்தைத் தாக்கி எட்டுச் சீனர்கள் சில பர்மியர்கள், சில இந்தியர்கள் இவர்களைக் கூட கொன்றுவிட்டனர்.

பயமடைந்த ஜனங்கள் அங்கு விட்டு ஓடத் தலைப்பட்டனர்.

ஒரு சுரங்கத்தைத் தவிர மற்றபடி எல்லாச் சுரங்கங்களும் நாட்டின் உற்பத்தியில் பாதி தகரத்தை உற்பத்தி செய்கின்றன. ஆனால் அவையாவும் கலகக்காரர் வசமாகிவிட்டன. பெருவாரியான தகரச் சுரங்கங்கள் இந்தியர் வெள்ளையர் [illegible]த்தில் உள்ளவை.

இந்திய தேர்தலைப் பார்த்தறிய இந்தோனேஷியா அதிகாரிகள் விஜயம்

புதுடில்லி டிச 19—

இந்தியாவின் பொதுத் தேர்தல்களை பற்றிய விதிமுறைகளையும் தேர்தல் நடைபெறும் விதத்தையும் கண்டறிந்து செல்வதற்காக இந்தோனேஷிய சர்க்காரின் மத்திய பொதுத்தேர்தல்கள் ஸ்தாபனத்தின் காரியதரிசி டாக்டர் ஸாபகஜோ ராக்போதிரோவின் தலைமையில் இந்தோனேஷியத் தூதகோஷ்டி ஒன்று ஜனவரி மாதத்தில் இந்தியாவுக்கு விஜயம் செய்யுமென்று தெரிகிறது.

போர் சரிந்து இருவர் பலி

அமலாபுரம், 20—

பிழிந்து போடப்பட்ட ஒரு கரும்பு சக்கைப் போர் சரிந்தபோது அதன் பக்கத்தில் கன்னி பொறுக்கிக் கொண்டிருந்த 2 தொழிலாளிகள் நசுங்குண்டு மாண்டனர். ஒரு சிறு பெண்ணும், வேறு 6 பேரும் காயமுற்றனர்.

பார்லிமெண்டு கூட்டம்

பிப்ரவரி 5-ம் தேதி கூடும்

புதுடில்லி, டிச 20—

1952 பிப்ரவரி 5-ம் தேதியன்று இந்திய பார்லிமெண்டின் கூட்டத்தை ஜனாதிபதிகூட்ட உத்தரவிட்டிருக்கிறர்.

அமெரிக்கா கோதுமை வருகை

பம்பாய் டிச 20—

மொத்தம் 1,95,000 டன் கோதுமையை ஏற்றிக்கொண்டு இரு கப்பல்கள் அமெரிக்காவிலிருந்து இன்று பம்பாய் வந்தன.

மனமார்ந்த நன்றி

திராவிட முன்னேற்றக் கழக மாநில மாநாடு வெற்றி வாகை சூட சீரும் சிறப்புடன் நடந்தேறியமைக்கு, ஒத்துழைத்த பேராதரவு தந்த அனைவருக்கும் வரவேற்புக்குழுவின் சார்பில் முதன்முதலாக மனமார்ந்த நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

சிறக, இவ்வித வெற்றிக்கு முதல்வராய், இரவென்றும் பகலென்றும் பாராது கண்ணும் கருத்துமாயிருந்து அமைதியுடன் பணியாற்றிய காஞ்சி தோழர் புட்டாச்சாமி அவர்களுக்கும், [illegible] பிரதான [illegible] பொறுப்புடன் [illegible]மையைச் செய்த சி. வி. [illegible]ராசனுக்கும், ஆர். டி. அரசு, எ. கே. சாமி, கிருஷ்ணன் ஆகியோருக்கும், தொண்டர்களாயிருந்து, தளரா உழைப்பைத் தந்து மாநாட்டிலே சிறு கலவரத்திற்கும் இடமேற்படாதவாறு பணியாற்றிய தொண்[illegible] [illegible]ன், படைத் தலைவர் [illegible] [illegible] காஞ்சி வி. எம். மார்க், பெண் தொண்டர் படைத் தலைவர் அலமேலு அப்பாத்துரையாருக்கும், ஓவியக் காட்சியைச் சிறப்பித்த ஓவிய நிபுணர்கள் பாலு பிரதான், மாதவன் பிள்ளை, பழனிச்சாமி, சண்முகம், சந்திரன் மின்னல் அரி, ஓவியக் காட்சி குழுவின் முதல்வர் டாக்டர். சவுரிராசன், மற்றும் தில்லைவில்லாளன், மதியழகன், கலைப்பகுதியின் பொறுப்பை யேற்று கவலையுடன் பணியாற்றிய தோழர்கள் மு. கருணாநிதி. டி. எம். பார்த்தசாரதி தீர்மான ஆய்வுக்குழுவினராயிருந்து கடமையை நிறைவேற்றிய தோழர்கள் நெடுஞ்செழியன், சம்பத், வி. எம். ஜான், மதியழகன், பொன்மலை பராங்குசம், கலைவாணர்கள் என். எஸ். கிருஷ்ணன், குழுவினர் கே. ஆர். ராமசாமி, குழுவினர், மு கருணாநிதி சக்ரபாணி, கணேசன் குழுவினர், தி. மு. க. தோழியர்கள், தி. மு. க. தோழர்கள், சி. எஸ். ஜெயராமன், கே. ஆர். செல்லமுத்து, தாகூர் அனிபா. நமச்சிவாயம், ஜி. கஸ்தூரி அம்மையார், இரா. சண்முகம், பந்தல் அமைத்துக் கொடுத்த சுப்ரமண்யம், கோவிந்தசாமி, பிலிம்ரீல்ஸ் எடுத்த ஜூபிடர் பிக்சர்ஸ், எனெஸ்கே பிலிம்ஸ், மின்சார விளக்கு, ஒலிபெருக்கி ஏற்பாடுகளை இணையற்ற வகையிலே செய்த சென்னை செண்ட்ரல ஏஜென்ஸி, மற்றும் அஞ்சல் நிலைய அதிகாரிகள், பஸ் போக்குவரத்து இலாகாவினர், தியணைக்கும் படையினர், போலீஸ் இலாகாவினர். கட்டணம் சிறிதுகூட பெறாமல் விளம்பரம் செய்த மாலைமணி, திராவிட நாடு, திராவிடன், போர்வாள், ஞாயிறு, போராட்டம், மறுத்ததுவு ஆகியபத்திரிகாசிரியருக்கும் மற்றும் 'சோஷலிஸ்ட்' மெயில் தினத்தந்தி, சண்டே அப்சர்வர் பத்திரிகைகளுக்கும் பொதுவாக மாநாட்டிலே பெரும்பணி யாற்றிய வி. முனுசாமி எ. கிருஷ்ணகண்ணு ஆகியோருக்கும் பிரதிநிதிகள், நன்கொடையாளர், பார்வையாளர், எல்லா கிளைக் கழகத்தினர் பொதுமக்களாகிய அனைவருக்கும் மாநாட்[illegible] செயலாளர்களாயிருந்[illegible] பணியில் முனைந்[illegible] காஞ்சி மணிமொ[illegible] மனோகரன் [illegible] சாம்பு விள[illegible] மு. கருணாநி[illegible] தொண்ட[illegible] [illegible]

19 பேரைக் கொன்ற புலி

பத்ராசலம், டிச.20—

பத்ராசலத்திலிருந்து இருபது மைலுக்கப்பாலுள்ள நல்லபள்ளி என்ற கிராமத்தில் இந்த மாதத்தில் 19 கோயாமலை ஜாதியினர் ஒரு புலிக்கு இரையாயினர் அந்த புலி பலருக்கு அபாயம் விளைவித்து வருகின்றது புலிக்கு இரையானவர்களின் அக்கிராம முனிசி[illegible] ராகும் அந்த [illegible] வருக்கு [illegible] வழுவ [illegible] சர்க்கார் இன்னும் அறிவிக்கவில்லை

இந்தியாவின் உணவு நிலை

உலக பாங்கு நிபுணர் கருத்து

பம்பாய், டிச 20—

இந்தியா இன்னும் சில வருஷங்களுக்கு உணவுப் பொருள்களில் சுயதேவை பூர்த்தி செய்து கொள்ள [illegible] ன்று உலக பாங்கு கமிஷன் தலைவர் டாக்டர் கோஸ்டர் இன்று தன் கருத்தை வெளியிட்டார்,

இந்தியாவின் இன்றைய தேவை உணவு உற்பத்தியை திவிரப்படுத்த வேண்டியதே தவிர பயிர் செய்யக்கூடிய நிலங்களை விஸ்தரிப்பதல்ல.

பல வருஷங்கள் தொடர்ந்தாற்போல் அமோகமாக விளையும் பக்ஷத்தில இந்தியா சுயதேவையைப் பூர்த்தி செய்து கொள்வது சாத்தியமாகும் அது வரை சுயதேவையைப் பற்றி சிந்திக்கவும் முடியாது என்று அவர் கூறினர்.

டாக்டர் கோஸ்டர் டில்லியிலிருந்து இன்று பம்பாய் வந்து சேர்ந்தார். அவர் உடனே ஜினிவாவிற்கு பிரயாணமாகிறார்.

சென்னை மாகாணத்தில் மற்றொரு சிமெண்ட் தொழிற்சாலை

கர்நூல் ஜில்லாவில் அமைக்கப்படும்

சென்னை, டிச 20—

கர்நூல் ஜில்லாவில புதியதொரு சிமெண்ட் தொழிற்சாலையை அமைக்க வி. ராமகிருஷ்ணா என்ற மாஜி ஐ. சி. எஸ். காரர் முன் வந்துள்ளார். இத்திட்டம் சம்பந்தமான விவரங்களை வகுத்து சர்க்காரிடம் ரிப்போர்ட் சமர்ப்பிக்கும்படி அவருக்கு சர்க்கார் உத்தரவிட்டுள்ளனர். இத்திட்டத்துக்கான பூரா செலவையும் அவரே ஏற்றுக்கொள்வார். உத்தேச தொழிற்சாலையில் வருஷத்துக்கு ஒரு லட்சம் டன் சிமெண்ட் உற்பத்தியாகும் என்று மதிப்பிடப்படுகிறது.

ஜி. கணேசன் டிக்கட் விற்பனை இலாகாவைக் கண்காணித்து வந்த ஈழத்து அடிகள், மணி, கிருஷ்ணமூர்த்தி, சம்பந்தம் ஆகிய அனைவருக்கும் மற்றும் சொற்பொழிவாளர்கள், எஸ். ஐ. எ. ஏ. திடல் செயலாளர்களுக்கும், மாநாட்டினை [illegible] வைத்த கே. கே. நீல[illegible] யக் காட்சி [illegible] சிற்ற[illegible] [illegible]

மாலை மணி

சென்னை 21-[illegible] வெள்ளிக்கிழமை

[illegible]து மக்களுக்குத் தனி எச்சரிக்கை!

திராவிட முன்னேற்றக் கழக மாநில மாநாட்டில் தேர்தலில் யாரை ஆதரிப்பது என்ற நமது முடிவை அறிவித்த பிறகு கம்யூனிஸ்ட் ஏடான 'ஜனசக்தி' அந்தத் தீர்மானம் மிக மிக ஏமாற்றத்தை அளிப்பதாகவும் காமராஜர்களும் சாமியப்பாக்களும் வெற்றி பெறச் செய்ய உதவுமென்றும் குறிப்பிட்டிருக்கிறது. உண்மையில் சாமியப்பா வெற்றி பெற வேண்டுமென்று அதிகார பூர்வமாக உழைப்பவர்களிடம் கை குலுக்குகின்ற கம்யூனிஸ்டுகள் நம்மைப்பற்றிய அபாண்டத்தைச் சுமத்துவது ஏனோ தெரியவில்லை! நம் கழகத்தை 'உதிரிகள்' என்று கூறியவர்களிடம் சேர்ந்துகொண்டு; வெட்கத்தை விற்றுவிட்டு வாழ்வதற்கு நாம் ஒப்பவில்லையென்றால் நாம் எதிரிகளான வெற்றிக்கு ஆதரவு தருகிறோம் என்று கூறுவது மிக மிகத் தவறான பிரசாரமாகும்.

நம்முடைய நேசக்கரம் நீட்டப்பட்ட நேரத்திலே அதைத் தட்டிவிடும் முறையிலே நம் அடிப்படை பிரச்சினையை அவமதித்துவிட்டு "தேர்தலுக்கு மட்டும்வா" என்று அழைத்துவிட்டு, இப்போது "மதாதுல தேவைப்படுகிறது அல்ல" என்று குறிப்பிடுவது கம்யூனிஸ்ட் ஆட்சி அமைக்க அழைக்கவில்லை என்று சுட்டிக்காட்டுவதும் புரியாத புதிர்களாகவே இருக்கின்றன. சாமியப்பா, தஞ்சை மாவட்டத்திலே கம்யூனிஸ்டுகளின் அழிவுதேடும் வேலையிலே அக்கறை எடுத்துக் கொண்டவர், அவரை வெற்றி பெறும்படிவிடுவது மகாகொடுமை என்றெல்லாம், மேடை அதிர பேசிவிட்டு, ஏடுகளிலே எழுத்தோவியங்கள் தீட்டிவிட்டு, அவரை ஆதரித்து நிற்பவர்களின் கூட்டுறவிலே நிற்கும் செயலுக்கு என்ன பெயர் என்றே நமக்குப் புரியவில்லை.

ஒரு பக்கம் முதலாளி விடம் விருந்து, மறுபக்கம் தொழிலாளி துயர் துடைக்கும் பிரசங்கம்!

கம்யூனிஸ்டுகளின் வீரத்திற்கு—கொள்கைக்கு வேறுபட்ட செயலாயிற்றே இது!

இத்தகைய அவலட்சணமான ஐக்கிய முன்னணிக்கா நாங்கள் அழைத்தோம்!

எங்கள் கூட்டுறவு இருந்திருந்தால், ஈரோட்டில கே. டி. ராசுவை எதிர்க்க மாட்டோமே!

சேலத்தில் மோகன் குமாரமங்கலத்தை ஒழிக்க முயல மாட்டோமே! காஞ்சியில் நடைபெற்ற கூட்டமொன்றில் தோழர் ஜீவானந்தம் [illegible]னர்: "சாமியப்பா [illegible]க்கொடுக்கும் [illegible]ஞா!"

மனப்பான்மையோடு உறவாட முடிகிறது கம்யூனிஸ்டுகளின் மனப்பான்மை!

ஆனால் ஒழுங்கான—உறுதியான—பிளவற்ற ஐக்கிய முன்னணிக்கு நாம் அழைத்தோம்—அதற்கு ஒப்புதல் கூற முடியவில்லை கம்யூனிஸ்டுகளால்! ஒப்புதல் கூறாதது மட்டுமல்ல; நம் உயிர்ப் பிரச்சினையையே மறுக்கவும் தொடங்கிவிட்டார்கள்.

ஜனசக்தி கம்யூனிஸ்டுகளின் பத்திரிகையல்ல என்று கூறுகிறவர்களிடம் தொடர்பு வைத்துக் கொள்ள முடிகிறது!

ஜனசக்திக்கு மதிப்பு தந்து அதன் சந்தேகங்களை போக்க முற்படுகிற நேசம் விரும்புகிற நம்மை அணுகி வரவே அஞ்சுகிறார்கள்!

'திராவிட முன்னேற்றக் கழகத்தை ஒரு ஸ்தாபனமாக ஒத்துக்கொள்ள மறுத்து ஜனநாயகத்தைப் புரிந்து கொள்ளாதவர்களிடம் நேசம் வைத்துக் கொள்ளும் அளவுக்கு வளவு ஏற்பட்டது [illegible]மைபல!

ஜனநாயகத்தில் இயங்குகிற ஒரு மாபெரும் சக்தியோடு நட்பு வைத்துக் கொள்ள நடுக்கம் ஏற்படுகிறது! திராவிட முன்[illegible] [illegible]றக் கழகம் கம்யூ[illegible] [illegible] ஆதரிக்க [illegible]யர் என்று கூறவில்லை. ஆதரிக்க இயலாத சூழ்நிலையை கம்யூனிஸ்டுகளே உற்பத்தி செய்து கொண்டார்கள்!

நம் பிரச்சினைக்கு ஒத்துவராதது மட்டுமல்ல—நம் பிரச்சினையே தவறு என்று கூறிவிட்டார்கள்! மேடைகளிலே 'திராவிட நாடு நியாயமானது' என்று கூறியவர்கள் ஒப்பந்த ஏட்டிலே கை எழுத்திட ஏன் மறுத்தார்கள் என்பதுதான் சிந்திக்க வேண்டிய பிரச்னை! ஏட்டிலே கைஎழுத்துப்போட்டவர்களே மாறி விடுவார்கள் என்று ஆருடம் கணிக்கும் போது, கை எழுத்துப் போடாமல் மேடையிலேமட்டும்பேசிக் கொண்டிருந்தவர்கள் மாறாமல் இருந்து விடுவார்கள் என்று எப்படி நம்புவது?

நாமென்ன கம்யூனிஸ்டுகளை ஆதரிப்பதாக ஒரு புறம் காட்டிக் கொண்டு, மறுபுறத்திலே கம்யூனிஸ்டுகளை காட்டி முதலாளிகளை பயமுறுத்தி தேர்தல்வியாபாரம் நடத்துகிறவர்களா?

கம்யூனிஸ்டுகளுக்கு நாம் வலியுறுத்திக்கூற ஆசைப்படுகிறோம். விடுதலை (20-12-51) பொன்மொழியை அவர்களிடம் ஒரு முறை நினைவூட்டுகிறோம். விடுதலையின் பொன் மொழி அவர்களுக்கு ஒருபாடமாக இருக்கட்டும்!

"உள்ளன்புடன் குலவுகிற மனைவியை அலட்சியமாகக் கருதிக்கொண்டு நடனமாடும் [illegible]ன் கண் வெட்டிலும் [illegible]பேச்சிலும் மயங்கி [illegible]ரந்திக்கொண்டு [illegible]வனுக்கு என [illegible] நல்ல புத்தி

திராவிட முன்னேற்றக் கழகத்தை கம்யூனிஸ்டுகள் பலஹீனமான கட்சி என்று கருதவில்லையென்பது நமக்கு நன்றாகத் தெரியும்.

தலைவர்—பத்திரிகை ஆசிரியர்—சொற்பொழிவாளர்—கமிட்டி—செயலாளர் அறிக்கை விடுப்போர் ஆலோசனை சொல்பவர் பொருளாளர் எல்லாமே ஒருவராக இருந்து பல பல அவதாரங்களில் நடத்தப்படும் கட்சியல்ல தி. மு. கழகம் என்பதை கம்யூனிஸ்டுகள் நன்கறிவர்!

"பத்து பதினைந்து சிறுவர்கள்! பாவம்; நல்லவர்கள்" என்பதற்காக கம்யூனிஸ்டுகள் பிரியங் காட்டவில்லை யென்பதும்—பத்து பதினைந்து சிறுவர்கள் பகைவரும் மலைக்கும்படியான—கிழவர்கள் வயிறு எரியும் படியான மாநாட்டை நடத்திக் காட்டினார்கள் என்ற அளவில் நமது சக்தியை அவர்கள் உணர்ந்து தானிருக்கிறார்கள். சென்னையைச் சுற்றி இரண்டு மூன்று கூட்டங்கள் பிரமாத விளம்பரத்தில் நடைபெற்ற அந்த நாளிலே கூட இரண்டு லட்சம் பேர் கூடிய மகாநாட்டை நடத்துகின்ற அளவுக்கு மக்கள் உள்ளத்தில் குடியேறி விட்டவர்கள் என்பதும் அவர்களுக்குத் தெரியாததல்ல! கம்யூனிஸ்டுகள் நம் சக்திக்கு மதிப்பு கொடுக்கிறார்கள்.

கம்யூனிஸ்டுகள் மட்டுமல்ல; காங்கிரஸ்காரர்கள் [illegible] நம் சக்திக்கு மதிப்பளிக்கிற காரணத்தால்தான் ஓரளவுக்கு நம்மை இருட்டடிப்பு செய்யாமல் நம் செய்திகளைப் போட முன் வந்திருக்கிறார்கள்! நம் செய்திகளை காங்கிரஸ் ஏடுகள் போடுவதால் நாம் காங்கிரசின் கங்காணிகள் என்று கூறுவது கடைந்தெடுத்த பொறாமைச் செயல்!

கம்யூனிஸ்டு ஏடுகளும் [illegible]ன் மாநாட்டு செய்தியைப் போட்டன. அதனால் நாம் கம்யூனிஸ்ட் கங்காணிகளா?

சோஷலிஸ்ட் ஏடுகள் கூடத்தான் அதிக அளவில் போட்டன. அதனால் நாம் சோஷலிஸ்ட் கங்காணிகளா?

தினத்தந்திகூடத்தான் போட்டது; அதனால் நாம் பிரஜா கட்சி கங்காணிகளா?

பெரியாருக்கு விவாகம் நடைபெற்றபோது மாதவ மேனன் போன்ற மந்திரிகள் ஆதரித்து பேசினார்கள்! அதனால் பெரியார் மாதவமேனனின் தொடர்பு கொண்டவர் என்று கூறிவிட முடியுமா?

ஓமந்தூராரை ஆதரித்துப் பெரியார் பேசாத மேடை கிடையாது! அதனால் பெரியார் காங்கிரஸ் கங்காணியாகிவிட முடியுமா?

ஏன்? கம்யூனிஸ்டுகளின் நிகழ்ச்சிகள், பேச்சுகளுக்கும் கூடத்தான் காங்கிரஸ் ஏடுகள் இடம் தருகின்றன. அதனால் கம்யூனிஸ்டுகள் காங்கிரஸ் கங்காணிகளாகி விட முடியுமா?

காளி கோயில் கட்டியுள்ள திரு ஆர். எச். சர்மா அவர்களை ஆதரிப்பதே குற்றமல்ல என்று கூறப்படும் போது; அதற்கு ஆரிய கங்காணி என்று பட்டம் சூட்டப்படாமலிருக்கும் போது; குற்றமற்றவர்களை, கொள்கை தவறாதவர்களை கங்காணிகள் என்று கூறிவேஎ எந்த 'நீதி தேவன்' தந்த அதிசயத்

தீர்ப்போ என்று புரியவில்லை!

காங்கிரஸ் வெற்றிக்குவழி தேடுவதாக இருக்கிறது நம்போக்கு என்று கூறிடுகிற தோழர்கள் நன்றாக சிந்தித்துப் பார்க்க வேண்டும். 'திராவிடநாடு' என்ற லட்சியத்தை பல ஆண்டுகளாகக் கூறி வந்திருக்கிறோம் நாம்! தேர்தலிலே நிற்கப் போவதில்லையென்பதையும் சேலத்திலிருந்து முழக்கி வந்திருக்கிறோம் நாம்!

நியாயப்படி—நமக்கு இருக்கிற சக்திப்படி—நாமே தேர்தலில்போட்டியிட்டிருக்க வேண்டும். அந்த சூழ்நிலை அமையாத காரணத்தால் தேர்தலில் காங்கிரசை எதிர்ப்பவரை ஆதரிப்பது என்று முடிவு செய்தோம். அப்படி ஆதரிக்கப்படுகிறவர் நம் அடிப்படைப் பிரச்சனைக்காக சட்டசபையிலே வாதாடுகிறவராக இருக்கவேண்டும் என்று விரும்பினோம். நாமோ சட்ட சபையில் இல்லை! நம் குரலாவது சட்ட சபையில் கேட்க வேண்டும் என்று ஆசைப்பட்டோம்! ஆசைப்படுவதிலே தவறுமில்லை; அர்த்தமில்லாமலுமில்லை! சிறையிலேயிருந்து திரும்பி வந்த நம்பியார் சட்ட சபையிலே குன்றத்தூர் கொடுமை பற்றி கேட்டதாகத் தெரியவில்லை! நாரணமங்கலம் அடக்குமுறைபற்றி நாவசைக்கவில்லை! அண்ணாவும் பெரியாரும் சிறைபட்டது பற்றி கேள்விகேட்டதாக கேள்விப்படவில்லை.

அப்படிப் பட்டவர்களை சட்ட சபைக்கு அனுப்பும் போது ஆலோசித்து, உறுதிபெற்று, கையெழுத்[illegible] [illegible]நேசத்தை வலுப்படுத்தி ஐக்கியத்தை பலப்படுத்தி ஆதரவு தருவது என்பதிலே என்ன தவறு இருக்க முடியும்!

தி. மு. கழகம் என்ன சர்வாதிகா[illegible]ஸ்தாபனமா? அண்ணா[illegible] சொல்லிவிட்டார்; அதுதான் தேவவாக்கு என்று கூறிட! தி. மு. கழகத்திற்கு ஒரு பொதுக்குழு இருக்கிறது அந்தப் பொதுக் குழுவிலே அரசியல் அனுபவம் பெற்ற ஆற்றல் நிறைந்த வீரர்கள் இருக்கிறார்கள்.

பத்துவயதுச் சிறுவன் பக்குவம் தெரியாப் பசலை என்ற நீதியில் உள்ளவர்கள் அல்ல கட்சியின் கட்டுப்பாட்டை வளர்ப்பவர்கள்!

ஏதாவது ஒரு உத்தரவைப் போட்டு விட்டு, பல மாதங்களுக்குப் பிறகு பேருக்கு ஒரு கமிட்டி போட்டு அந்த உத்திரவுக்கு முத்திரை போடும் மூற்போக்கற்ற சர்வாதிகாரமல்ல தி.மு.கழகத்தை ஆட்டிப் படைப்பது! தி. மு. கழகம் ஜனநாயகத் தோட்டம்! அந்தத் தோட்டத்[illegible] இலட்சியப் புது மலர்கள், அதிலே பணியாற்றும் இளைஞர்கள்! அவர்கள் வெறும் தேர்தல் விரும்பிகள் அல்ல!

தேர்தலை இடைக்காலப் பிரச்சினையாக எண்ணுபவர்கள்!

"அய்யோ! நம் அடிப்படைத்திட்டமான பணநாயகக் கொள்கையை கெடுத்து விட்டார்களே பாபிகள்" என்று அலறுகிறவர்களுக்கு தி. மு. கழகத்தின் தேர்தல் திட்டம் பச்சை அயோக்யத்தனமாக இருக்கலாம். ஆனால் அந்தப் பச்சை அயோக்யத்தனம் என்ற பட்டம் பெற்றாலும் கவலையில்லை; கட்டிக்காத்த [illegible]யமான [illegible]ட்டத்திலிருந்து மாற

மாட்டோம் என்று உறுதி கூறி விட்டது தி. மு. கழகம்!

அந்த உறுதிக்கு இணங்கி, ஒப்பந்த ஏட்டில் கையெழுத்திட்டவர்கள் சுமார், நூற்றியம்பதுபேர் அவர்களிலே, மாவட்ட கமிட்டிகள் தகுதி, திறமை பார்த்து பொறுக்கி எடுக்கப்பட்டவர்கள் சுமார் எழுபது பேர்!

அந்த எழுபது பேரும் இழந்த நம் நாட்டைப் பெறும் பணியிலே நம்மோடு ஒத்துழைக்கப் போகிறவர்கள்!

அந்த எழுபது பேரை மட்டும் நம்பி திராவிட நாட்டு பிரச்சினையைஅவர்களிடம் நாம் ஒப்புவித்து விடவில்லை. அல்லது நம்மால் முடியாத ஒன்றை அவர்களிடம் கொடுத்து வெற்றி வாங்கித் தரும்படி கூறவில்லை!

"எம் ஒத்துழைப்பு வேண்டுமானால் உம ஒத்துழைப்பை அளியுங்கள்" என்று கூறுவது எப்படி கோழைத்தனமாகும்!

கம்யூனிஸ்டுகளைக் காட்டி—பணக்காரரை மிரட்டி தேர்தல் வாணிபம் செய்பவர்கள் நம் செயலைப் பழிக்கலாம் ஆனால் [illegible]ழிப்பவர்கள் இங்கிக்க வேண்டும், காங்கிரசை ஒழிக்க கம்யூனிஸ்டுகளின் தலைவை நாடுவதும், சாமியப்பா, சர்மாக்களின் துணையைத் தேடுவதும் எந்தப் பட்டியலிலே இடம் பெறுகிற கோழைத்தனம் என்பதை! கம்யூனிஸ்ட் நண்பர்களிடத்திலே நமக்கு அளவற்ற மதிப்பு உண்டு! அவர்களின் தற்போதைய செயல்களால் மனமொடிந்த நிலையில் கடுமையான சில சொற்கள் வெளிவந்திருக்கலாம். அதை வைத்துக்கொண்டு கம்யூனிஸ்டுகளுக்கும் நமக்கும் பகை மூட்டிட கனவு காண்கிறார்கள் பலர்!

கம்யூனிஸ்டு நண்பர்களும் கூறியிருக்கிறார்கள், நமது பொதுச் செயலாளரும் கூறியிருக்கிறார்; [illegible] வார்த்தைகள் [illegible]

கம்யூனிஸ்டுகளின் தியாகத்தை நாம் பாராட்டியதைப் போல் கம்யூனிஸ்டுகள் கூட நம் தியாகத்தைப் பாராட்டியது கிடையாது!

தியாகிகள் எந்தக் கூடாரத்திலே இருந்தாலும் அவர்களை நாம் பாராட்டியிருக்கிறோம் தேசிய இயக்கத்திலே தூக்கு மேடையை முத்தமிட்ட பகவத்சிங்கும், செக்கிழுத்த சிதம்பரமும், தில்லையாடி வள்ளியும், திருப்பூர் குமரனும், நம்மைவிட பெரியார் ராமசாமியால் அதிகம் பாராட்டப்பட்டிருக்கிறார்கள் ஆனால் அந்த தியாகிகள்வாழ்ந்த காங்கிரஸ் கூடாரத்தை கனலக்கிடும் வார்த்தைகளால் தாக்கிட பெரியார் தவறியதில்லை.

தியாகிகளை பாராட்டினார்! தியா கொள்கைகளை எதிர்த்துப் பேசினார்! தியாகிகள் இருக்கிறார்களே என்பதற்காக தித்திப்பு மொழி பேசவில்லை பெரியார்! தீ மொழிகள் வீசியிருக்கிறார்!

கம்யூனிஸ்டுகள் காங்கிரசை ஒழிப்பது என்பதை பெரியார் எப்படி பாராட்டுகிறாரோ அப்படித்தான்காங்கிரசார் வெள்ளையனை விரட்டுகிறார்கள் என்பதை அண்ணா பாராட்டினார்!

காங்கிரசை ஒழிப்பதற்காக கம்யூனிஸ்டை பாராட்டும் பெரியார், அடிப்படைப் பிரச்சினையான திராவிட நாட்டைமறந்துவிட்டார்! வெள்ளையனை ஒழித்த காங்கிரசாரைப் பாராட்டிய அண்ணா, திராவிட நாட்டுப் பிரச்சினையை மறந்துவிடவில்லை!

இதை நமது எதிர்ப்பாளர்கள் நம சக்தியைக் கண்டு சங்கடப்படுவோர், நம் வளர்ச்சி கண்டு வயிறு எரிவோரின் வாய்ஜாலத்தில் மயங்கியுள்ள கம்யூனிஸ்டு நண்பர்கள் உணர வேண்டும். பொதுமக்களும் இது போன்ற கபட நாடகப் பேச்சில் கவனத்தைசெலுத்தாமல் காங்கிரசை ஒழிப்பதை கருத்தில் கொண்டு, அதே சமயம் திராவிடநாட்டு பிரச்சினைக்குஆதரவு தருவதாகஉறுதி கூறிய அபேட்சகரை தேர்தலில் ஆதரிக்கும்படியாக கேட்டுக் கொள்கிறோம். வாழ்க உண்மையான பொதுவுடமை! வாழ்க உண்மையான நேர்மை! வாழ்க புனிதமான பொது ஜன சேவை! வீழ்க, வீண் பித்தலாட்டம்!

கச்சாப் புகையிலை

பிரிட்டன்தான் அதிகமாக வாங்குகிறதாம்

சென்னை, டிச 19—

1949-50-ல் சென்னை ராஜ்யத்தில் 72,300000 பவுண்டு கச்சாப் புகையிலை உற்பத்தி செய்யப்பட்டது.

இதில் 60 சதவிகிதம் வாங்குவது பிரிட்டன் என்றும் 45,600000 பவுண்டு சென்னை ராஜ்யத்திலிருந்து இறக்குமதி செய்திருப்பதாகவும் கணக்கிடப்பட்டுள்ளது.

பிரிட்டனுடன்சென்னை கச்சா புகையிலைவாங்கிய இதரநாடுகள்: செகர்லண்டு 4,040,000 பவுண்டு: பெல்ஜியம் 3,200000பவுண்டு; சீனா 1,600,000 பவுண்டு: ஹாங்காங் 4,000 000 பவுண்டு;

இந்தியாவிலுள்ள 22 சிகரெட்டு உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளுக்கு சென்னை அபரிமிதமான கச்சாப்புகையிலை ஏற்றுமதி செய்தது.

1949-ல் இந்தியா 21,822000000 சிகரெட்டுகள் உற்பத்தி செய்தது இவைகளில் கோல்டு ப்ளேக்" "விஸாஸ் வரெவன் ஓ' பாஸின்ஷோ முதலியன குறிப்பிடத்தக்கது இலங்கை, பர்மா, மலேயா, முதலிய நாடுகள் இந்தியாவிடமிருந்து சிகரெட்டுகள் இறக்குமதி செய்யும் முக்ய நாடுகள் சிகரெட்டு காகிதம் உற்பத்தி செய்யும் தொழிற்சாலை கல்கத்தாவில் இவ்வருஷத்திய மார்ச் மாதத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. இத்தொழிற்சாலை ஒவ்வொரு மாதமும் 240 டன் சிகரெட்டிற்கு வேண்டிய காகிதம் உற்பத்தி செய்து வருகிறது இதில் 100 டன் நாட்டிற்கு ஒதுக்கிவைக்கப்படுகிறது. எஞ்சிய 140 டன் ஏற்றுமதி செய்யப்படுகிறது

சிந்து பிரதமர் ராஜிநாமா

கராச்சி, டிச. 19—

சிந்து பிரதமர் ஜனாப் எம். ஏ. குர்ரோவும், உள்நாட்டு மந்திரி ஜனாப் பஸ்லுல்லாவும் இன்று ராஜிநாமா செய்தனர் லஞ்ச ஊழல் குற்றங்களுக்காகவிசேஷ விசாரணை கோர்ட் இவர்களை விசாரிக்கும், ராஜிநாமா செய்ய கிரணயிக்கப்பட்டிருந்த 24 மணி நேரத்திற்குப் பிறகே இவர்கள் ராஜிநாமா செய்தனர்.

[illegible] இன்னமும் நீடிப்பதால் தாம் இல்லாத எந்த சர்க்காரும் சட்டபூர்வமாக செல்லும்படியாகாது என்றும் ஜனாப் எம். ஏ. குர்ரோ கூறினார்.

புதிய தலைவரைத் தேர்ந்தெடுக்க கட்சிக் கூட்டமொன்று அடுத்த புதன் கிழமை நடைபெறும் அதுவரைஜனாப்குர்ரோ சர்க்காரில் மிகுதியுள்ள இரு மெம்பர்கள் சர்க்கார் நிர்வாகத்தை நடத்துவர் பாகிஸ்தான் பிரதமர் குவாஜா நாஜிமுதீன் சிந்து கவர்னரை இன்றிரவு சந்தித்து சட்டபூர்வமான நிலைமையை பற்றி விவாதிப்பார்.

காணமல் போன தளபதி

கைதி ஜாபிதாவில் இருக்கிறது

வாஷிங்டன், டிச 19—

ஐ. நா. யுத்தக் கைதிகள் கைதிகள் ஜாபிதாவில் ஜெனரல் வல்லியம் டீனின் பெயரும் காணப்படுவதாக யு. எஸ். சர்க்கார் கூறுகிறது. ஐ. நா. தரைப்படை தளபதியான இவர் சென்ற வருஷம் ஜூலை 25-ல் முதல் காணமற் போனது வாசகர்களுக்கு நினைவிருக்கலாம்.

கொரியா யுத்த நிறுத்த பேச்சுகள்

கம்யூனிஸ்டுகளின் ஆட்சேபம்

பான் முன் ஜான், டிச. 20—

யுத்த நிறுத்த காலத்தில் விமான நிலையங்களைப் பழுது பார்க்கவும்கட்டவும்கம்யூனிஸ்டுகளுக்கு அனுமதி அளிப்பதா? கூடாதா என்பது பற்றி இரு தரப்பு அதிகாரிகளும் இன்று பேசினர்.

கொரியாவில் கம்யூனிஸ்டுகளுக்கு உபயோககரமான விமான நிலையம் இல்லையே என்பதற்கு சீன பிரதிநிதி கோபங்கொண்டார்.

இரண்டு தினங்கள் முன் கிடைக்கப்பெற்ற யுத்தக் கைதிகள் ஜாபிதா பரிசீலிக்கப்படுவதாக ஐ. நா. கட்சியினர் தெரிவித்தனர்.

ஆங்கிலத்தில் கைதிகள்பெயர்களை குறிப்பிட்டு ஜாபிதா கொடுக்கப்படாததற்கு கம்யூனிஸ்டுகள் ஆக்ஷேபிக்ககொரியா சீன பாஷையில் ஜாபிதா தயார் செய்துத் தருவதாக நேசதேசத்தினர் நேற்று வாக்குறுதி தந்தனராம்.

யுத்தத்தில் உயிரிழந்ததாக அறிவிக்கப்பட்டவர்களின் பெயர்கள் கம்யூனிஸ்டுகள் ஜாபிதாவின் உள்ளதாம், காணமற்போனதாகக் கருதப்படும் நபர்களின் பெயர்கள் கம்யூனிஸ்டுகளின் ஜாபிதாவில்இருக்கலாமென்றும் யூகிக்கப்படுகிறது.

அணுக் குண்டு அழிவிலிருந்து தப்பிக்க

மாணவரின் திட்டம்

லண்டன், டிச. 20—

தாங்கள் வசிக்கும் நகரத்தைப் பற்றி அறிகிடார்ட்போர்டு கிராமர் பள்ளியின் சுமார் 100 மாணவர்கள் ஆறுவாரங்கள் வரை சுற்றுப்பிரயாணம் செய்தனர்.

இவர்கள் இத்துடன் தங்கள் நகரம் அணுகுண்டுவீச்சிலிருந்து தப்பித்துக் கொள்வதற்கு வேண்டிய பாதுகாப்பு திட்டங்கள் மிகவும் திறமையாக வகுத்திருப்பதால் முனிஸிபல் அதி[illegible] [illegible] நடத்துவதற்கு முயன்று வருகின்றனர்.

மாணவர்கள் இத்துடன் தேசப்படமும் மிகவும் திறமையுடன் வரைந்துள்ளனர். தங்கள் ஜில்லாவில் எங்கெங்கு பெரிய கடைகள் உள்ளன, ஜனத்தொகையின் விஸ்தரிப்பு மீன் பிடிப்பதற்கு செல்ல சிறந்த இடம், 26 மாதாக் கோவில்களை எப்படி கண்டு பிடிப்பது 45 உணவுச் சாவடிகளை கண்டுபிடிக்கும் முறை முதலிய விவரங்களும் அளித்துள்ளனர்களாம். இவைகள் யாவும் பொது மக்கள் காணக்கூடிய நிலையத்தில் வைக்கப்பட்டிருக்கிறது.

பஸ் விபத்து

ஒரு பெண் மாண்டாள் 20 பேருக்கு காயம்

காரைக்குடி, டிச 19—

இங்கு இன்று பிறபகல் ஒரு கொடிய பஸ் விபத்தேற்பட்டு அதனால் ஒரு பெண் கொல்லப்பட்டாள் 20 பேருக்குக் காயம்.

இன்னொரு பஸ்ஸைக் கடந்து செல்ல யத்தனித்தபோது மேற்படி பஸ் ஒரு தென்னை மீது மோதி விபத்தேற்பட்டதாகக் கூறப்படுகிறது, போலீஸார் விசாரிக்கின்றனர்.

கேள்வி! பதில்!

கேள்வி:

"முன்பு பட்டேல் வந்தபோதும் இப்போது நேரு வந்தபோதும் ஏன் கருப்புக் கொடி காட்டவில்லை?"

பதில்:

இப்போது வந்த நேரு காங்கிரஸ் தலைவர் என்ற முறையில் அறிவித்து விட்டு வந்தார் அதனால் கறுப்பு கொடி காட்டவில்லை! முன்பு பட்டேல் வந்தபோது கருப்புக் கொடி காட்டாத காரணம், ஆற்காட்டை பார்த்து கேட்கவேண்டும்.

அய்யங்காருக்கு ஈ. வே. ரா. ஆதரவு தேடுகிறார்

செங்கற்பட்டு தொகுதி தேர்தல்

செங்கற்பட்டு, டிச 19—புலிப்பாக்கம் பி. சேஷாத்ரி அய்யங்கார் தலைமையில்நேற்று மாலை தர்கா மைதானத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டமொன்றில் வருகிற தேர்தல் பற்றி திராவிட கழகத் தலைவர் ஈ. வே. ராமசாமி பேசினார். அவ்வமயம் மக்கள் காங்கிரஸை ஆதரிக்கக் கூடாதென்றும் குடியரசுக் கட்சி சார்பில் செங்கற்பட்டு பார்லிமெண்ட் தொகுதியில் நிற்கும் ஸ்ரீ பி. ஸ்ரீநிவாஸ அய்யங்காரை மக்கள் ஆதரிக்கவும் ஈ. வே. ரா. கேட்டுக் கொண்டார் சில கேள்விகளுக்கும் பதிலளித்தார். ஆரம்பத்தில் காஞ்சிபுரம் வெங்கடராமனும் பேசினார்.

சென்னையின் புதிய ஷெரீப்

அனந்தராமகிருஷ்ணன் பதவியேற்றார்

சென்னை டிச 21—சென்னையின் புதிய ஷெரீப் அனந்தராமகிருஷ்ணன் நேற்று ஹைகோர்ட்டில் பழைய ஷெரீப் வி. டி. வி. காயுநிவிடமிருந்து பதவியை ஏற்றுக் கொண்டார்.

அறிவிப்பு

23—12—51 ஞாயிறு காலை 9 மணிக்கு சிரங்கம் தோழர் தர்மலிங்கம் அவர்கள் தோட்டத்தில் [சிக்கப்பெருமாள் கோவில் பக்கம்] சிரங்கம் திருவானைக்காவல் தி. மு. க. உறுப்பினர்கள் கூட்டம் நடைபெறும்.

மாநிலமாநாட்டு முடிவுகளும் சிரங்கம் தொகுதி தேர்தலும் என்பது பற்றி முடிவுகள்செய்ய வேண்டியிருப்பதால் உறுப்பினர்கள் அனைவரும் இதனையே அழைப்பாகக் கொண்டு தவறாது வர வேண்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

விமானங்களில் உள்ள எண்ணெய் "டாங்கிகள்"

நெருப்புபற்றி சேதமடையாமல் இருப்பதற்கு புது வழி

லண்டன், டிச. 21—விமானங்களிலுள்ள எண்ணெய் "டாங்கிகள்" நெருப்புப் பற்றி சேதமடையாமல் இருப்பதற்கு ஒரு பிரிட்டிஷ் தொழிற்சாலை ஒரு புது வழி கண்டுபிடித்திருக்கிறது.

இந்த விமானத்தில் பொருத்தப்பட்டிருக்கும் கருவி நெருப்பை அணைக்கும் ஒரு வித புகையை அபரிமிதமாக அனுப்பிவிடும். இதனால் எண்ணெயில் தீப்பிடித்து விமானம் வெடிக்காமல் இருப்பதற்கு சாத்தியமாகின்றதாம்.

பள்ளி ஆசிரியர் மறைந்த மாயம்!

நாகப்பட்டிணம், டிச 19—வெளிப்பாளையம் முனிசிபல் ஆரம்பப் பாடசாலை ஹெட்மாஸ்டர் சீனிவாஸய்யங்கார் சென்ற 11-12-51 தேதி காலை வீட்டை விட்டு வெளியே சென்றவர் வீட்டிற்கு திரும்பி வரவில்லை. பள்ளிக்கூடத்திற்கும் போகவில்லை. முனிசிபல் கமிஷனரை விசாரித்ததில் லீவ் லெட்டர் ஒன்றும் கிடையாதென்றும், வேறு தகவல் ஒன்றும் தெரியவில்லை என்றும் கூறுகிறார் சீனிவாஸய்யங்காரின் குடும்பத்தார் போலீசிற்கு தகவல் கொடுத்துள்ளனர். அவர் வீட்டில் அவர் மனைவியும் ஒரு குமாரனும் ஒரு குமாரத்தியும் இருக்கிறார்கள், நாகப்பட்டணம் பெருமாள் வடக்கு வீதியில் அவர் ஜாகை.

லண்டனில் விமானத்திற்கு பனித் தொந்தரவு

ஆறுதல் மந்திரமாக இறங்கியது

லண்டன், டிச. 21—மத்திய லண்டனில் செல்லும் பொழுது ஒரு விமானம் சுமார் இரண்டு மணிநேரம் வரை அதெங்கு சென்று கொண்டிருக்கிறதென்று பிரயாணிகளுக்கு புரியவில்லை. இதற்குக் காரணம் லண்டன் மீதுள்ள பனி.

விமான நிலையத்திற்கு இறங்கிய பிறகு தான் சுமார் 600 கஜங்களுக்கு அப்பாலுள்ள பொருள்கள் பிரயாணிகள் கண்களில் தென்பட்டன. இந்த விமானம் இறங்குவதற்கு முன்பு விமான நிலைய அதிகாரிகள் விமான ஓட்டியை பிரயாணிகளுடன் தன் இருப்பிடத்திலே சுற்றுக் கொண்டிருக்குமாறும், இவர்களுக்கு உதவி புரிய மற்றொரு விமானம் வருகிறதென்றும் செய்தி அனுப்பினார்கள். இரண்டாம் விமானமும் பனியில் அகப்பட்டுக்கொண்டு எங்கேயோ மறைந்துவிட்டது. இதைத் தேட மூன்று டிராக்டர்கள், ஒரு நெருப்பு அணைக்கும் என்ஜின் இரண்டு ரேடியோ வண்டிகள் அனுப்பப்பட்டன. பிறகு இந்த விமானமும் கண்டுபிடிக்கப்பட்டது. பாரிஸ் நகரத்திலிருந்து முதல் விமானத்தில் வந்த பிரயாணிகள் தாங்கள் அமைதியாக திராட்சா ரஸம் பருகியதாகவும், சீட்டு விளையாடிக் கொண்டிருந்தாகவும் கூறினார்கள். புகை பிடிப்பதற்கு மட்டும் எங்களுக்கு அனுமதியில்லை என்று பிரயாணிகளில் ஒருவர் கூறினார்.

எகிப்திய - பிரிட்டிஷ் தகராறு

"பொருள் நிலை குலைந்து விடும்"

பிரஞ்சு பத்திரிகை எகிப்திற்கு எச்சரிக்கை

கெய்ரோ, டிச, 21—எகிப்திய பிரிட்டிஷ் தகராறினால் வருங்காலத்தில் எகிப்தின் பொருள் நிலை குலைந்து விடும் என்று லெ புரோக்கிரஸ் ஈஜிப்ஷியேன் என்ற பிரஞ்சு பத்திரிகை கூறியுள்ளதாவது:-

எகிப்து இத்தகராறினால் தன் ஏற்றுமதி செய்யப்படும் மார்க்கெட்டுகளில் 22 சத விகிதம் இழக்க நேரிடும்; இறக்குமதி செய்யும் இடங்களில் 20 சத விகிதம் இழக்கவும் நேரிடும், 37 சத விகிதம் எகிப்திய பஞ்சு ஏற்றுமதி செய்வதில் பாதிக்கப்படுவதுடன் காமன் வெல்த் நாடுகளின் மேசமும் நீங்கும். எகிப்திய பஞ்சு விலையும் மிகவும் குறைந்து விடும்.

ஞாபக சக்தி இழந்த புதை பொருள் நிபுணர்

—(O)—

பூனையின் ஆதிகாலத்து சரித்திரம் இதனால் வெளிவருகிறது

லண்டன், டிச, 20—மேதாவிகள் ஞாபக சக்தி இழப்பது சர்வ சாதாரணம். இதனால் நம் வீட்டில் வசிக்கும் பூனையின் சரித்திரம் வெளி வருவதற்கு சாத்தியமாகின்றது. இதற்குச் சான்று பிரிட்டனின் பிரசித்தி வாய்ந்த புதைப் பொருள் ஆராய்ச்சி நிபுணர் ஸர் பிலிண்டர்ஸ் பெட்ரி 1907-ல் எகிப்திலிருந்து தோண்டி எடுத்த 192 பூனைகள், ஏழு கீரிப்பிள்ளைகள், மூன்று நாய்கள், மூன்று நரிகள் இவைகளின் எலும்புக்கூடுகளை பிரிட்டிஷ் மியூஸியம் அதிகாரிகளிடம் கொடுத்து மீண்டும் பெறுவதற்கு மறந்து விட்டார் இதனால் எகிப்தின் புராதனத்தைப் பற்றி ஆராயும் நிபுணர்கள் இந்த எலும்புகளைக் கொண்டு வீட்டுப் பூனையின் பூர்வீக சரித்திரத்தை ஆராய முயன்று வருகின்றனர்.

மிருகச் சங்கத்தின் பேராசிரியர் டாக்டர் டபிள்யூ. வி. எல். ஸ்காட் ...

...பதாகவும் இவர் கூறுகின்றார்.

ஐ. நா.வில் இந்திய தூதுகோஷ்டித் தலைவர்

பாரிஸ் டிச 20—உலக கோர்ட்டில் நீதிபதியாக நியமிக்கப்பட்ட பி. என். ராவுக்குப் பதில் பாரிஸில் இந்தியது ஐ. நா. மகாசபையில் இந்தியத் தூது கோஷ்டியின் தலைவராவார் ஸர்தார் பணிக்கரின் ஸ்தானத்தில் நவநகர் ஜாம்ஸாஹேபும் கர்னல் பஷீர்ஹுஸேனுக்கும் பதில் ஏ. டி. மணி பதில் பிரதிநிதியாகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மலேயாவிக்கு மன்ட்காமரி?

சார்ச்சில் உத்தேசம் பற்றி ...

... டிச 21—

... அரசியல் வட்டாரங்கள் கருதுகின்றனர்.

கழக நடவடிக்கை

தென்னாற்காடு மாவட்டம்:—வியாழன் காலை 10 அரை மணிக்கு திட்டக்குடி தி. மு. கழக கமிட்டி கூட்டம் தன்னீர் சோடா நிலையத்தில் க. முருகன் தலைமையில் நடைபெற்ற அவசர கூட்டத்தில் வரப்போகும் பொதுத் தேர்தலில் மத்திய குழு தீர்மானப்படி மக்கள் சபைக்காக விருத்தாசலம் தொகுதிக்கு தோழர் ந. பரமசிவம் அவர்களையும் தி. மு. க. ...

... தோழர்கள் அவர் அவர்கள் சொந்த செலவில் பொதுக்கூட்டங்கள் சொற்பொழிவு நடத்தி ஆவன செய்து காங்கிரஸை தோற்கடிக்க வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது. தேர்ந்தெடுத்த தோழர்கள் 1. இரா. இராசலிங்கம், 2. மு. கணவீந்தன், 3. க. முருகன், 4. இரா. பூலோகம், 5 மு. வெங்கடாசலம், 6 இரா. கன்னையன், இதில் கண்ட தோழர்களை கழகக்குழு தீர்மானித்திருப்பதால் மற்ற தோழர்களும் ஆதரித்து ஒத்துழைக்க வேணுமாய் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

ஓர் வேண்டுகோள்

அண்மையில் நடைபெற்ற திராவிட முன்னேற்றக் கழக மாநில மாநாட்டு நிகழ்ச்சிகளைப் புத்தக வடிவில் வெளியிட விரும்புவதால், மாநாட்டு ஊர்வலத்தையும் தொடர்ந்து நடைபெற்ற நாலு நாட்களின் நிகழ்ச்சிகளையும் போட்டோ எடுத்த அன்பர்கள் மேற்படி புகைப் படங்களை கீழ்க் குறிப்பிடும் விலாசத்துக்கு அனுப்பி வைத்தால் பெரிதும் நன்றியுடையவர்களாக இருப்போம்.

"திராவிட நாடு"
அலுவலகம்
காஞ்சீபுரம்

இந்தியாவில் பிரிட்டிஷ்கவுன்சில்

ஸர் ரோனல்ட் ஆடம் தரும் தகவல்

கல்கத்தா, டிச 2—"இந்தியாவிலுள்ள சர்வகலா சாலைகளுக்கு புத்தகங்கள் வழங்குவதும், பிரிட்டிஷ் சர்வகலாசாலைகளுக்கு படிக்கச் செல்லும் இந்திய மாணவர்களுக்கு போதிய வசதி அளிப்பதற்கும், பிரிட்டிஷ் கவுன்ஸில் முயன்று வருகின்றது என்று பிரிட்டிஷ் கவுன்ஸிலின் தலைவர் ஸர் ரோனல்ட் ஆடம் இங்கு "குனோப்" நிருபரிடம் கூறினார். அவர் மேலும் கூறியதாவது:—பிரிட்டிஷ் கவுன்ஸில் கலை சம்பந்தப்பட்ட ஸ்தாபனம், இசை, நாடகம், மெடிகல், சமூக விஞ்ஞானங்களில் தான் விசேஷ கவனம் செலுத்தும். இதன் தலை ஸ்தாபனம் ஆக்ராவில் உள்ளது. இந்தியாவிலுள்ள எல்லா சர்வகலா சாலைக்கும் டெக்னிகள் புத்தகங்கள் மூன்று மாதங்கள் வரை வைத்துக் கொள்ள இந்நாம் நிலையம் ஏற்பாடு செய்திருக்கிறது.

இந்நாட்டில் பல்வேறு ராஜ்யங்கள் பலவித மான புத்தகங்களைக் கோருகின்றன. உதாரணமான சென்னை ராஜ்யம் கலையிலும், மெடிகல் விஷயத்திலும் விசேஷ சிரத்தை காட்டுகின்றது.

கல்வி சம்பந்தப்பட்ட ...

... யங்களில்தான் விசேஷ சிரத்தை காட்டுகின்றன என்று இவர் மேலும் கூறினார்

திருடியதாக 2 பேர் கைது

சென்னை, டிச 21—... நாயக்கன் தெருவில் உள்ள ஒரு வீட்டிலிருந்து சென்ற மாதம் சில நூல் கட்டுகளை ஆணிகள் அடங்கிய ஒன்றையும் திருடியதாக ஜார்ஜ் டவுனைச் சேர்ந்த எல்லப்பனையும் மொட்டையையும் பூக்கடை போலீஸ் ஸ்டேஷன் சப் இன்ஸ்பெக்டர் பெருமாள் நாயுடு கைது செய்தார் திருட்டுசாமான்கள் பின்பு கைப்பற்றப்பட்டன

கரண்ட்' பத்திரிகாலயம் சோதனை செய்யப்பட்டது

பம்பாய், டிச 20—நேற்று 'கரண்ட்' என்ற பத்திரிகாலயத்தை போலீஸார் சோதனையிட்டது சம்பந்தமாக மேற்படி பத்திரிகை ஆசிரியர் ... கராகா பின் கண்ட ... கையில் கூறுவதாவது: ... சர்க்கார் ... சென்ஸ் ... பட்ட ... போட்டி விளம்பரம் ...

... இதை வெளியிடுவது பம்பாய் சாதாரண சட்டத்தை மீறுவதாகாது என்று எனக்கு அவர்கள் ஆலோசனை கூறினர்.

பண்ணைகள் நடத்துவதற்கு செலவு அதிகரிக்கிறது

பிரிட்டனில் சர்வே

லண்டன், டிச. 21—பிரிட்டனில் நிலச்சுவான்தார்களும், சர்க்கார் அதிகாரிகளும் பண்ணைகள் நடத்துவதைக் குறித்து சர்வே செய்தனர். 1938 லிருந்து இன்று 24 சத விகிதம் அதிகரித்திருக்கிறதென்றும், பண்ணைகள் நடத்தும் செலவு 95 சதவிகிதம் (உஷ்ணம் போல ஏறிக்கொண்டு இப்பொழுது இங்கிலாந்து) உயர்ந்திருப்பதாயும் கூறியுள்ளனர்.

1949, 1950-ல் சுமார் 276 இல்லங்கள் சர்வே ... இவை ...

... பெருங் கஷ்டம் ... தொழிலாளிகளின் பஞ்சம். ... வருஷம் மட்டும் சுமார் 27,000 பேர்கள் குடிசைத் தொழிலைவிட்டு இதர தொழிலுக்கு சென்றுவிட்டனர். கிராமங்களின் நிலையை அபிவிருத்தி செய்தால் இவ்வியக்கத்தை தடுக்க சாத்தியமென்றும், சர்க்கார் இதில் போதிய கவனம் செலுத்தவேண்டும் என்றும் இவர்கள் கேட்டுள்ளனர்.

சாபம் இடப்பட்டுள்ள கப்பல்

கரிதூக்கியாகமாறியபிறகுதான் இது நீங்கியதாம்

மாண்டிரியல், டிச 21—19-ம் நூற்றாண்டில் "மெலனூப்" என்று ஒரு கப்பல் கட்டப்பட்டது இதற்கு தலைமை தாங்கிய காப்டன் வாட்ஸன் என்பவர் பிரயாணிகளுக்கு பழம் விற்பனை செய்ய வந்த ஒரு கிழவியை விரட்டியடித்து விட்டார். வெகுண்டு இக் கிழவி கப்பலுக்கும், அதிலுள்ள பிரயாணிகளையும் சாபம் இட்டுச் சென்றாள். அன்றிருந்து இக்கப்பலுக்கு அனேக இடையூறுகள் ஏற்பட்டதாம்.

முதலில் இக் கப்பலுக்கு பிங்கனிருடாவில் விபத்து ஏற்பட்டது. ஆண்ட்வர்ப் என்ற இடத்தில் இதை ஒரு மாலுமிக்கு விற்கப்பட்டது. இவன் ஒரு இந்திய சிப்பந்தியின பெண்ணை அடித்துக் கொண்டு ஓடிவிட்டான். பணமாவை அடைந்தது இப் பெண்மணி ஜுரத்தினால் மாண்டாள்; மாலுமி தற்கொலை செய்து கொண்டான்.

இதற்கு பிறகு காப்டன் வில்ஸ் இக்கப்பலின் தலைமை வகித்தார். ஒரு பெரிய சண்டமாருதத்தினால் இக்கப்பல் கொலம்பியா ஆற்றங்கரையில் அகற்றப்பட்டது. இதனால் ஏற்பட்டுள்ள சேதத்தையும் ரிப்போர்ட் செய்யப்பட்டது. கரிதூக்கி கப்பலாக இதை மாற்றப்பட்டபிறகுதான் சாபம் நீங்கியதாம்.

இதன் காப்டன் என். கே. வில்ஸ், பிரிட்டிஷ் கொலம்பியாவின் வான்கோவர்" நகரத்தில் நேற்று 76 வயதில் மாண்டார்.

நடுவானில் விமான மோதல்!

கார்டிப் டிச 21—நடுவானில் இரண்டு பயிற்சி விமானங்கள் மோதி ஒன்றுடன் ஒன்று சிக்கிக்கொண்டு பூமியில் வந்து விழுந்தன.

மத்ய கிழக்கில் புரட்சி ஏற்படும்

கம்யூனிஸ்ட்டுகளின் நம்பிக்கை

லண்டன், டிச. 21—மத்ய கிழக்கு நிலையும், எகிப்திய-பிரிட்டிஷ் தகராறு வருங்காலத்தில் ஒரு புரட்சி ஏற்படுத்துவதற்கு காரணமாய் விளங்கும் என்று கம்யூனிஸ்டுகள் நம்புகின்றனர்.

இதுவரை மத்ய கிழக்கு நாடுகள் கம்யூனிஸ்டுகளுக்கு தடையிட்டிருந்தன. சில நாடுகள் இவைகளை கன்ட்ரோல் செய்திருந்தன 23 ஆண்டுகளுக்கு முன்பே எகிப்தில் கம்யூனிஸம் பரவுவதற்கு சாத்தியம் என்று ஸோவியத் நிபுணர்கள் கருதியிருந்தனர்.

1928-ல நடைபெற்ற காமின்டரின் உலக காங்கிரஸ் கூறியிருப்பதாவது:—

"எகிப்தில் மாபெரும் புரட்சி ஏற்படுவதற்கு போதிய நிலை ஏற்படும் தொழிலாளிகளும், குடியானவர்களும இவ்வொரு புரட்சியினால் மட்டும ராஜ்ய பரிபாலனம் செய்வதற்கு சாத்யமாகும்."

கிழக்கு நாடுகளில், மேற்கு நாடுகளின் மீது ஏற்பட்டுள்ள வெறுப்பு வருங்காலத்தின் ஒரு பெரும் புரட்சிக்கு அடிப்படையாக திகழுவது திண்ணமென்று மாஸ்கோ நம்பி இருப்பதாக இங்கு ராஜ்ய தந்திர வட்டாரங்களில் யோசனை கூறியுள்ளனர்.

இத்தாலிக்கு ஸிரியப் போலீஸ்

மாஸ்கஸ் டிஸ 26—இத்தாலிய போலீஸ் ஸ்தாபனங்களில் பயிற்சி பெறுவதற்கு ஒரு ஸிரியப் போலீஸ் மாணவர்களின் தூதுகோஷ்டி இத்தாலிக்கு சென்றுள்ளது.

வாழ்க! ஸ்டாலின்!



இரஷ்ய புரட்சி வீரன் ஸ்டாலின் அவர்களின் 72-வது பிறந்த நாள் விழா ரஷ்ய தலை நகரில் வெகு விமரிசையாக கொண்டாடப்பட்டது. ரஷ்ய மக்கள் தலைவனுக்கு வணக்கம் செலுத்துவகையில் தங்கள் நாடு முழுமை அலங்கரித்து அழகு பெறச் செய்தனர் ஊர்வலங்களும், பொதுக் கூட்டங்களும் ஆங்காங்கு நடைபெற்றன. பாசிச ஆட்சித் தலைவனாக விளங்கும் தேரு உட்பட பல நாட்டுத் தலைவர்களும் ஸ்டாலினை வாழ்த்தி செய்திகள் அனுப்பியுள்ளனர். நாமும் நமது புரட்சி வீரரை வாழ்த்துகிறோம் வாழ்க வளமான பொதுவுடமை!

இனி நடப்பவை

சென்னை :- 28—12—51 ஞாயிறு மாலை வட சென்னை ராயபுரம் இராபின்ஸன் பார்க்கில் தோழர் ஆல்பர்ட் ஜேசுதாசனை ஆதரித்து தோழர் மு. கருணாநிதி, விருதை இராமசாமி மற்றும் பலரும் தேர்தலில் தி. மு. க.வின் கடமை என்பதைப் பற்றி பேசுவார்கள்.

சென்னை:—13-வது (கச்சாலீஸ்வர) வட்டம் தி. மு. க. கிளைக் கழகத்தின் இல்லத்தில் 23-12-51 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணி அளவில் ஒரு பொது உறுப்பினர் கூட்டம் நடைபெறும். அவ்வமயம் கழகப் பணியாளர்களை மாற்றியமைக்கப்படும். முறையே செயலாளர் துணைச்செயலாளர் பொருள் உறுப்பினர் விளம்பர உறுப்பினர் செயற்குழு முதலியன.

காஞ்சிபுரம்:—நகர தி. மு. க. செயற்குழுக் கூட்டம் 28-12-51 ஞாயிறு காலை 10 மணிக்கு "திராவிடநாடு" நிலையத்தில் நடைபெறும் செயற்குழு உறுப்பினர்கள் இதையே அழைப்பாகக் கொண்டு வர வேண்டுகிறேன். செயலாளர் சபாபதி

சென்னை: திருவள்ளுவர் கழகத்தில் 94-95, புதுத் தெரு, மண்ணடி ராஜமன்னார் ஆரம்பப் பாடசாலை கூட்டத்தில் 28-12-51 ஞாயிறு காலை 10 மணிக்கு புலவர் சி. முருகேசனார்தலைமையில் செல்வி அருண்மொழி பி. ஓ. எல். அவர்கள் வாழ்வும் வள்ளுவரும் என்னும் பொருள் பற்றி ஓர் சிறந்த சொற்பொழிவு நிகழ்த்துவார்கள்.

... வயிற்றுக்கு கிடைக்கவில்லை!

நாரையின் பரிதாப மரணம்

எலுரு டிச 20—மேற்கு கோதாவரி ஜில்லாவில் உள்ள கோல்லார் ஏரியில் ஒரு நாரை விசித்திரமான சந்தர்பங்களில் இறந்த செய்தி கிடைத்துள்ளது.

அந்த ஏரியில் ஒரு நாரை மீன் பிடித்துச் சாப்பிட வட்டமிட்டுக் கொண்டிருந்தாம் திடீரென்று அந்த நாரை ஒரு பெரிய மீனைப் பிடித்து விழுங்க ஆரம்பித்தது மீன் மிகவும் பெரியதாகஇருந்தபடியால் நாரையின் தொண்டையில் சிக்கிக்கொண்டு அந்த மீன் உயிருக்கு மன்றாடிக் கொண்டிருந்தாதாம்.

அந்த சமயத்தில்எலுருதாசில் அப்பக்கம் வந்த இந்த நாரையைக் குறிபார்த்து தன் துப்பாக்கியால் சுட்டாராம் துப்பாக்கிக் குண்டு நாரையின் தொண்டையைக் கிழித்துக்கொண்டுசென்றதாம்.

இறந்த நாரையைக்கொண்டுச் சென்ற படகுக்காரர்கள் நாரையின் தொண்டையினின் வெளியே துருத்திக்கொண்டிருந்த மீனை அதன் வாலைப் பிடித்து இழுத்துவிட்டனராம் உடனே மீன் தண்ணீரில் குதித்து உயிர் தப்பியதாம் பாவம்! நாரை இறந்தது.

கிராமங்களுக்கு ரேடியோ செட்டுகள்

சென்னை, டிச. 18—சர்க்கார் டிசம்பர் 6-ந் தேதி முடிவடையும் வாரத்தில் 7 கிராமங்களில் வட ஆற்காடு சேலம், தஞ்சை மலபார் ராமநாதபுரம் நெல்லூர் மதுரைஜில்லாக்களின் சமுதாய ரேடியோ செட்டுகளை சர்க்கார் ஒலிபரப்பு இலாகா ஏற்படுத்தியது மொத்தம் 1730 செட்டுகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

விஷம் சாப்பிட்ட வாலிபர் மரணம்

சென்னை, டிச 21—மயிலாப்பூர் மாதவப்பெருமாள்கோவில் தெருவைசேர்ந்த ராகவன் (வயது 25) விஷம் சாப்பிட்டு விட்டதாக சிறிது நேரத்திற்கெல்லாம் இறந்துவிட்டான். மயிலாப்பூர் போலீசார் புலன் விசாரித்து வருகிறது.

பாராட்டுகிறோம்; பரவச மடைகிறோம்!

—......(X)......—

மாயவரச் சட்ட சபைத் தொகுதியில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஒப்பந்த ஏட்டில் கையெழுத்திட்டு, தி. மு. கழகத்தின் ஆதரவு பெற்று அபேட்சகராக நிற்கும்.

தோழர் சம்பந்தம் B. A. அவர்கள் அந்த தொகுதியின் விட்டுக் கொடுத்துவிட்டதோடு, ஐக்ய முன்னணி அபேட்சகர் தோழர் காத்தமுத்து அவர்களை பாராட்டுகிறோம். காங்கிரசுக் சவக்குழி செல்வதற்கான நல்ல எண்ணங்களில் இது ஒன்று என்பதால் பரவச மடைகிறோம்,

கணவனும் ... மனைவியும்

... இந்திய சர்க்கார் அமெரிக்காவுக்கு ... அதிகத் தடவைகள் வோட்செய்திருக் ... என்று கூறுகிறார் செஸ்டர் பௌல்ஸ் ஆகவே இந்தியாவும் அமெரிக்காவும் வெவ்வேறு முகாம்களில் இருக்கிறதென்று கூறுவது ஆதாரமற்றது என்று அவர் கூறுகிறார். சில சந்தர்ப்பங்களில் வேறுபாடுகள் ஏற்பட்டிருக்கலாம். அவற்றைப் பெரிது படுத்தாதீர்கள் கணவனுக்கும் பெண்சாதிக்கும் கூட அபிப்பிராய பேதம் ஏற்படாதா என்று கேட்கிறார்.

சபாஷ்! அப்படிச் சொல்லுங்கள்! அமெரிக்கத் தூதரே! இந்தியச் சர்க்கார் அமெரிக்கச் சர்க்காரின் வாழ்க்கைத் துணைவியாக செயலாற்றும் உண்மையை நன்றாய் கூறினீர்கள்,

ஆணுக்கு அடிமையாகப் பெண் வாழவேண்டுமென்ற பண்பாட்டைக் கொண்ட நாடல்லவா நமது நாடு? அந்த மரபுக்கு ஆபத்து ஏற்படக்கூடாதென்று, 'நமது' சர்க்கார் இந்து சட்ட தொகுப்பு மசோதாவைக்கூட குப்பைக் கூடையில் போடவில்லையா? அந்த மரபுக்கேற்ற முறையில் அமெரிக்கக் கணவனும் அடிபணிந்து வாழும் சர்க்கார் 'நமது' சர்க்கார்!

— ஜனசக்தி (21-12-51)

உள்ளன்புடன் குலவுகின்ற மனைவியை அலட்சியமாகக் கருதிக் கொண்டு, நடனமாடும் விலைமாதின் கண்வெட்டிலும் தளுக்குப் பேச்சிலும் மயங்கி, அவளைத் தூக்கிக் கொண்டு அலைகின்ற கணவனுக்கு என்றேனும் ஒருநாள் நல்ல புத்தி வந்து தான் தீரும்.

(விடுதலை 20-12-51)

சபாஷ்! அப்படிச் சொல்லுங்கள்! பெரியார் தூதரே! திராவிடர் கழகம் கம்யூனிஸ்ட் கட்சியின் வாழ்க்கைத் துணைவியாகச் செயலாற்றும் உண்மையை நன்றாய் கூறினீர்கள்.

ஆணுக்கு அடிமையாக பெண் வாழவேண்டுமென்ற பண்பாட்டைக் கொண்ட நாடல்லவா நமது நாடு? அந்த மரபுக்கு ஆபத்து ஏற்படக்கூடாதென்று ... கம்யூனிசம் வந்தால் திராவிடநாடுகூட வேண்டாம் என்று 'நமது' பெரியார் கூறவில்லையா? அந்த மரபுக்கேற்ற முறையில் கம்யூனிஸ்ட் கணவனுக்கு அடிபணிந்து வாழும் கட்சி திராவிடர்கழகம் என்று நாம் கூறத் தயாராக இல்லை. ... அலட்சியமாகக் கருதப்படுகிற உள்ளன்புடன் குலவுகின்ற மனைவி' உறுமக் கூடும்!

பொறுப்பற்ற தேர்தல் பிரசாரம்

சுய நலமே உருவானவர் நேரு

தேச முன்னேற்றத்தைத் தடுப்பவராம்

அம்பேத்காரின் விளக்கம்

நாகபுரி டிஸ 20—

நேருவை பதவி மோகம் பிடித்தாட்டுகிறதென்றும் பிரதம மந்திரியாக நீடிக்க அவர் தமது கொள்கைகளை யெல்லாம் தியாகிக்கக் கூடியவ ரென்றும் தேசம் முன்னேறுவதற்கு எப்போதும் அவர் தடங்கள் விளைவித்து வந்துள்ளாரென்றும் இன்று இங்கு நடந்த கூட்டமொன்றில் தாழ்த்தப்பட்டோர் சம்மேளனத் தலைவரான டாக்டர் அம்பேத்கார் குறைகூறினார். 1939-ல் வெள்ளையனே, வெளியேறு' இயக்கத்தை எதிர்த்த ஒரே காங்கிரஸ் காரியக்கமிட்டி மெம்பர் நேருதான் எனக் குற்றஞ் சாட்டினார்.

அவருடைய வெளி நாட்டுக் கொள்கைக்கூட சுயப்புகழ் தேடுவதுதான் நோக்கமென்றும் அக்கொள்கை நாட்டுக்கு நன்மையில்லை சுதந்திரம் பறிபோகுமென்பது தெளிவென்றும் மத்திய மந்திரி சபையிலிருந்து விலக அக்கொள்கை தான் காரணமென்றும் மேலும் கூறியதோடு நேருவின் தேர்தல் பிரசங்கங்களை தெளிவற்ற பொறுப்பற்ற முறையில் இருப்பதாகவும் கண்டித்தார் அவர்மீது சாட்டப்பட்டுள்ள புகார்களை மறுக்க முடியுமாவென நேருவுக்கு அவர் சவாலும் விடுத்தார்

25 பங்களா திருட்டுக்களில் சம்பந்தப்பட்டவன் கைது

சென்னை, டிச 20—

புதுக்கோட்டை திருமயத்தை சேர்ந்த சின்னப்பன் என்ற இருஷ்ணனை (வயது 22) சுகர போலீசார் கைது செய்து அவ... இரண்டாயிரம் ... கன் பவுண்டன் பேனாக்கள் தனிமணிகள் முதலிய சாமான்களைக் கைப்பற்றியுள்ளனர். ... நகர், கீழ்ப்பாக்கம் வேப்பேரி நுங்கம்பாக்கம் பிரதேசங்களில் 25 பங்களாக்களில் புகுந்து திருடியுள்ளதாகக் கூறப்படுகிறது சுவர்மீதும் தண்ணீர் குழாய் வழியாகவும் ஏறி உள்ளே சென்று திருடும் முறையைக் கையாண்டதாய் கூறப்படுகிறது. 15 திருட்டுக்களில் சம்பந்தப்பட்ட சொத்துக்கள் அடையாளம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன என்றும் தெரிகிறது.

சுப்ரீம் கோர்ட்டில் மக்கள் கட்சி அபேட்சகர் அப்பீல்

வருகிற மாதம் 7-ந் தேதி விசாரணைக்கு வரும்

புதுடெல்லி டிச 21—

மந்திரி பக்தவத்சலம் போட்டியிடும் பொன்னேரி தொகுதியிலும் சேலம் ஜில்லாவிலுள்ள நாமக்கல் தொகுதியிலும் இரு அபேட்சகர்கள் ஜாமீன்தாக்களை வெளியிடக் கூடாதென தடை உத்தரவு விதிக்க சுப்ரீம் கோர்ட் மறுத்து விட்டது.

பொன்னேரி நாமக்கல் தொகுதிகளில் தேர்தல் அதிகாரிகளின் முடிவை ஆட்சேபித்து முதலில் சென்னை ஹைகோர்ட்டில் மனு செய்து கொள்ளப்பட்டது தேர்தல் ஆட்சேப மனுக்களை விசாரிக்க ஹைகோர்ட்டுக்கு அதிகாரமில்லை என கருதி சென்னை ஹைகோர்ட் நிராகரித்தது.

அதே சமயம் சுப்ரீம் கோர்ட்டுக்கு அப்பீல் செய்ய அனுமதி அளித்தது அத்துடன் டிசம்பர் 25-ம் தேதிவரை இருமி அபேட்சகர்கள் ஜாமீன்தாக்களை பொன்னேரி நாமக்கல் தொகுதிகளில் வெளியிடக் கூடாது என்று சென்னை ஹைகோர்ட் இடைக்கால தடை உத்தரவு விதித்தது பிறகு சுப்ரீம் கோர்ட்டுக்கு அப்பீல் செய்து கொண்டது.

இந்தியாவின் பொதுத் தேர்தல்

பார்வையிட இந்தோனேஷியா அதிகாரிகள் விஜயம்

புதுடில்லி, டிச, 19—

இந்தியாவின் பொதுத் தேர்தல்களை பற்றிய விதிமுறைகளையும், தேர்தல்கள் நடைபெறும் விதத்தையும் கண்டறிந்து செல்வதற்காக இந்தோனேஷியா சர்க்காரின் மத்திய பொதுத் தேர்தல்கள் ஸ்தாபனத்தின் காரியதரிசி டாக்டர் ஸுபக்ஜோ ராக்கோதி புரோவன் தலைமையில் இந்தோனேஷியத் தூது கோஷ்டி ஒன்று ஜனவரி மாதத்தில் இந்தியாவுக்கு விஜயம் செய்யுமென்று மெதேகா பத்திரிகையில் டிசம்பர் 18-ம் தேதி இதழில் பிரசுரமாகியுள்ள பத்திரிகைச் செய்தி என்று கூறுகிறது.

சிந்துவில் இடைக்கால சர்க்கார்

கவர்னர் உத்தரவு

கராச்சி, டிச. 20—

அடுத்த வாரம் சிந்து முஸ்லிம் லீக் கட்சிக்குப் புதிய தலைவர் தேர்ந்தெடுக்கப் ... 5 பேர்கொ... ரோவை கவர்னர் ... முகம்மது கட்டிக் கொண்டிருப்பதாக சர்க்கார் அதிகாரிகள் கூறினர்.

லஞ்ச ஊழல் குற்றங்களுக்காக விசாரிக்கப் படும்பொருட்டு பதவியை ராஜினாமா செய்யுமாறு ஜுஸ் குர்ரோவுக்கு இருநாட்களுக்கு முன் கவர்னர் உத்தரவு பிறப்பித்திருந்தார்

தாம் இன்னமும் முஸ்லிம் லீக் கட்சியின் தலைவராக இருப்பதால் தாம் இல்லாத எந்த சர்க்காரும் சட்டப்படி செல்லுபடியாகாது என்று ஜுஸ் குர்ரோ தம் ராஜினாமாவில் குறிப்பிட்டிருந்தார். புதிய சர்க்கார் அமைக்க ஜுஸ் குர்ரோவின் ஸ்தானத்திற்கு ஒரு புதிய தலைவரைத் தேர்ந்தெடுக்க சிந்து முஸ்லிம் லீக் சட்டசபை கட்சி புதன் கிழமை கூடுகிறது.

திருட்டுகளில் சம்பந்தப்பட்டிருந்தனராம்

முஸ்லீம் ஸ்திரீகள் கைது

சென்னை, டிச. 21—

ஜார்ஜ் டவுனில் பல ஜவுளி கடைகளில் நூதன முறையில் திருட்டு நடப்பதாக போலீசாருக்கு புகார்கள் வந்துள்ளன. இரு ஸ்திரீகள், சிறிய பெண் ஒரு குழந்தை ஆகியோர் பர்தா முறையில் கடைகளில் புகுந்து சாமான்கள் வாங்குவதுபோல் பாவனை செய்து ஒரு ஸ்திரீ பேரம் செய்து கொண்டிருக்கும் போது மற்றவர் கடையிலுள்ள துணிகளை திருடி ஒளித்து வைத்துக்கொண்டதாகக் கூறப்படுகிறது

இது சம்பந்தமாக கடப்பை பைச் சேர்ந்த ரோஹியர பீ (வயது 25) பீ பீ ஜான் (வயது 22) ராபியா பீ (வயது 14) ஆகிய மூவரை போலீசார் கைது செய்துள்ளனர் திருட்டு போனதாகக் கூறப்படும் பல பொருட்கள் அவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்டன.

சென்னையில் வாக்காளர் மாநாடு

சென்னை, டிச 21—

சென்னை நகரில் ஜனவரி 2, 13 தேதிகளில் சென்னை நகர வாக்காளர் மாநாடு ஒன்று நடைபெறுமென்றும் அம்மாநாட்டை சென்னை மேயர் திறந்து வைப்பாரென்றும் வாக்காளர் மாநாட்டின் கன்வீனர் திரு எல் எஸ். சுப்ரமணியம் அறிவிக்கிறார்.'

இந்த மாநாட்டில் கலந்து கொள்ள எல்லா கட்சி அபேட்சகர்களும் அழைக்கப்பட்டிருப்பதாகவும் எல்லா கட்சி அபேட்சகர்களின் விளம்பர போஸ்டர்கள் அறிக்கைகள், கோட்டுகள் பிரசுரக் கண்காட்சியாக வைக்கப்படும் என்றும் இதனை உதவி மேயர் திறந்து வைப்பார் என்றும் மாநாட்டின் கன்வீனர் அறிவிக்கிறார்.

"இரு காண்டா மிருகங்கள் அனுப்புக"

அஸ்ஸாம் சர்க்காருக்குச் சென்னை மேயர் வேண்டுகோள்

சென்னை, டிச 20—

சென்னை மிருகக் காட்சி சாலைக்கு ஒரு ஜதை காண்டா மிருகங்களை அனுப்புமாறு அஸ்ஸாம் சர்க்காரை சென்னை மேயர் ஷிக்பதுல்லா கேட்டுக் கொண்டிருக்கிறார் இவை கிடைத்தால் பிடிக்குமாறுகாட்டு இலாகாவுக்கு உத்தரவிட்டிருப்பதாக அஸ்ஸாம் சர்க்கார் பதிலளித்திருப்பதாகத் தெரிகிறது.

ஜார்ஜ் டவுனில் இருவர் கைது

சென்னை, டிச 21—

ஜார்ஜ் டவுனிலுள்ள ஒரு வீட்டிலிருந்து "தூல் கட்டு"களைக் களவாடி அண்ணா பிள்ளை தெருவில் இருக்கும் ஒரு கடையில் விற்றுவிட்டதாக சந்தேகத்தின் பேரில் ஜார்ஜ டவுனைச் சேர்ந்த எல்லப்பன் (22), ... கன் (23) ஆகிய இருவரையும் பூக்கடை போலீஸ் ஸ்டேஷன் சப் இன்ஸ்பெக்டர் பெருமாள் ...

நாளை 23-12-51

ராபின்சன் பார்க்கில் கூட்டம்

தோழர்

மு. கருணாநிதி

தோழர்

பாலசுந்தரம்

தலைவர்: (ஐக்கிய மாகாண பீடித் தொழிலாளர் சங்கம்)

தோழர்

தியாகராசன்

மில் தொழிலாளர்

தோழர்

க. அறிவழகன்

தேர்தலில்

ஆல்பர்ட் ஜேசுதாசனை

ஆதரித்து பேசுவர்கள்

தி. மு. க தேர்தல் கமிட்டி

நுங்கம்பாக்கம் வ. உ. சி. கழக ஆண்டு விழா

23, 24, 25-12-51-ல் நாள்தோறும் 4-மணிக்கு அவன்யூ ரோடு எதிர் மைதானப் பந்தலில்,

ஞாயிறு மாலை 4-மணிக்கு இசைச்செல்வி G. கஸ்தூரி தமிழிசை.

துவக்குபவர்:

தமிழ்ப்பெரியார் திரு. வி. க.

தலைவர்:

இரா. நெடுஞ்செழியன், M. A. பன்மொழிப்புலவர் கா. அப்பாதுரை, M.A.L.T. C. சரோஜினி B.S.C. மற்றும் பலர் பேசுவர்.

வேலியே பயிரை மேய்கிறது!

பிரஞ்சு எல்லையிலிருந்து மதுபானம் கடத்தியதாக

கான்ஸ்டேபிளுக்கு 6 வார தண்டனை

கும்பகோணம், டிச. 19—

பொறையாறு போலீஸைச் சேர்ந்த கான்ஸ்டபிள் நெ. 1773 பி சுப்பிரமணியம் என்பவருக்கு அடிஷனல் முதல்வகுப்பு மாஜிஸ்டிரேட் டி ஏ இராமகிருஷ்ண ஐயர் 6 வாரம் கடின காவல் தண்டனை மதுவிலக்கு சட்டப்படி விதித்தார்.

பொறையாறுக்கு 6 பிராந்தி பாட்டில்களைப் பிரெஞ்சு எல்லையிலிருந்து கள்ளத்தனமாக இக்கான்ஸ்டபிள் கடத்தியதாகவும் மதுவிலக்குக் குற்றங்களைத் தடுப்பதற்காக இக்கான்ஸ்டேபிள் ஸ்பெஷல் டியூட்டியில் நியமிக்கப்பட்டவர் என்றும் அவரே இம்மாதிரி செய்திருப்பதனால் 6 வார கடின காவல் தண்டனை விதிக்கப்படுகிற தென்றும் கோர்ட்டார் தீர்ப்பில் குறிப்பிட்டார்கள் பொறையாறுபோலீஸ் சப் இன்ஸ்பெக்டர் இவ்வழக்கைத் தொடர்ந்தார்.

மு. கருணாநிதி சுற்றுப்பயணம்

23-12-51	சென்னை
24-12-51	காஞ்சிபுரம்
25-12-51	மாலை- பரங்கிப் பேட்டை, இரவு-சிதம்பரம்
26-12-51	மாயவரம்
27-12-51	திருவாரூர் (உமர்கிலைப் பள்ளி)
29-12-51	வேலூர்
...	... துறையூர்
5-1-52	தவுட்டுபாளையம்
7-1-52	சேலம்

சீனு மீது போர் தொடுக்க அமெரிக்கா திட்டம்

பிரிட்டிஷ் அரசாங்கத்தின் அவசர ஆலோசனை

லண்டன், டிச. 21—

கொரியா சமாதானத்தை கம்யூனிஸ்டுகள் மீறினால் சீனா தாக்கப்படும் என்று எச்சரிக்க வேண்டும் என அமெரிக்கா தெரிவித்திருப்பதாக அதிகாரப் பூர்வமான வட்டாரத்தினர் கூறுகின்றனர்.

கொரியாவில் சமரசம் ஏற்பட்ட பின் கம்யூனிஸ்டுகள் அதை மீறுவார்களானால் சீனாவை முற்றுகையிட வேண்டும் என்றும் பிரிட்டனுக்கு அமெரிக்கா யோசனை கூறியுள்ளது. இந்த யோசனைப்பற்றி பிரிட்டிஷ் அரசாங்கத்தினர் அவசர ஆலோசனை நடத்தி வருகின்றனர்.

கொரியாவில் பான்முன் ஜானில் யுத்த பேச்சுவார்த்தை தொடர்ந்து நடந்து வருகிறது.

சமரச உடன்பாடு ஏற்படுவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ள 30 நாள் காலவரம்புக்குள் உடன்பாடு ஏற்படாமலிருந்து பேச்சுவார்த்தை நீடிக்குமானால் காலவரம்பு நீடிக்கலாம் என்று தெரிகிறது.

கம்யூனிஸ்டுகளுக்கு எச்சரிக்கை விடுக்கும் அமெரிக்க யோசனை குறித்து அமெரிக்க ஜனாதிபதி ட்ரூமனும், பிரிட்டிஷ் பிரதமர் சர்ச்சிலும் அடுத்த மாதம் தங்கள் சந்திப்பின் போது ஆலோசிப்பர் என்றும் அதன் பின்னரே இறுதியாக முடிவு செய்யப்படும் என்றும் கூறப்படுகிறது.

Printed & Publishedby T. M. Parthasarathy at the Mercantile Press 2-45 Muthumari Chetty street. Madras-1

வானொலி

சென்னை

23-12-51 (49·30 மீ·)

காலை:—7 0 ஆரம்பம்; 7 15 த. செ; 7 30 இ. இ த: 8 0 ஆ. செ: 8 15 முடிவு.

பகல்: 1-0 களக்காடு எஸ். ராமநாராயணய்யர்—குரலிசை 1 30 இ த 1 40 ஹி செ. 1 50 இ த. 2-0 த செ; 2 10 இ த; 2 30 திருச்சியில் உள்ளபடி; 3 0 சுசிலா அச்சுதராமன் பாட்டு; சித்தூர் கோபாலகிருஷ்ணன் வயலின்; கோயமுத்தூர் என். ராமசாமி மிருதங்கம் 4 0 மோஹனகனம்' கே. விசுவநாதன் நாயர் எழுதிய கதா பிரசங்கம் 4 15 காசியாத்ரே- கன்னட நாடகம்; 4 30 ஐ சங்கீதம்; 5 முடிவு மாலை 5 30 வஸ், நாஸிர்ஹஜுல் பாட்டு 6 0 ஆ செ 6 10 அறிவிப்புகள் 6 15 சீதாலக்ஷ்மி நரசிம்ஹன் பாட்டு; 6 45 வி. வி. கிருஷ்ண மூர்த்தி பாட்டு 7 15 த செ 7 30 இ த; 7 45 எம் எ. கல்யாண கிருஷ்ண பாகவதர். தேவக்கோட்டை நாராயண ஐயங்கார் இரு வீணைகள்; 9 0 ஆ செ.; 9 15 அன்றைய கிரிக்கெட் விளையாட்டு விமர்சனம் மி ஆனந்தராவ் 9 25 மாலா சூரிய நாராயண மூர்த்தி பாட்டு; 9 45 சங்கீதம்; 10 30 முடிவு.

திருச்சி (395·8 மீ.)

காலை:- 7-0 ஆரம்பம்; 7-15 த செ 7-30 ஒலிப்பதிவு; 8-0 ஆ செ 8-15 இ த; 8-30 முடிவு; பகல்:- 12 0 இ த; 12-30 சூர்ய காந்தி கதம்ப நிகழ்ச்சி; 1-0 மணிமலர் 1-30 இ த; 1-40 ஹி செ; 1-40 இ த; 2-0 த செ; 2-10 பெண்ணுலகம்; 2-30 சென்டு இசை நிகழ்ச்சி ஆ இ ரே வி; 3-0 முடிவு. மாலை:- 5-30 கடத்தூர் சங்கரராமய்யர்--வீணை! 4-45 பி ஞானம்பாள் பாட்டு: 6-05 அறிவிப்புகள்: 6-10 இ த; 6-30 கி. நிகழ்ச்சிகள்: 7-15 த செ; 7-30 இ த; 7-45 திரைப்பட விமர்சனம் ஆர் பார்த்த சாரதி; 8-0 டி. வி ராமகிருஷ்ணன்பாட்டு ஆர் நடராஜன்-வயலின்; கே கே நடேசய்யர்.மிருதங்கம் கும்ஜலம் ஏ கன்னையன்-கடம்; 9-0 ஆ. செ; 9-15 கடத்தூர் சங்கராமய்யா-வீணை; 10-0 முடிவு

சென்னை, டிச 17—

	ரூ	அ	பை
எட்வர்ட் சவரன்	76	0	0
தங்கம் தோலா	106	10	0
மூளா தங்கம் தோலா	188	4	0
வெள்ளி 1 தோலா எடை	1	15	0

மணிலாப்பயறு:—

(531 ரா கொண்ட பாரம் விற்பனை வரி உட்பட)

புதுச பட்டாணி	179 மு 181	0	0

மணிலா எண்ணெய்—

(500 ராத்தல் கொண்ட பாரம் 1-க்கு எக்ஸ்பெல்லர் செடி)

(3 FFA)	364 மு 369	0	0
டிசம்பர்	368 மு 371	0	0
ஜனவரி	368 மு 372	0	0
பிப்ரவரி	372 மு 375	0	0

விளக்கெண்ணெய்—

(500 ராத்தல் பாரம் 1-க்கு மதராஸ் இடத்து டெலிவரி)

நரசராவ் பேட்டை	450	0	0
முதல்	460	0	0
திருப்பத்தூர்	460	0	0
முதல்	480	0	0

தேங்காய் எண்ணெய்—

(180 ராத்தல்) கொல்லம்

எம எஸ் மார்க்கு	88	0	9
"சௌகார்" மார்க்கு	89	12	9

சர்க்கரை (2 அந்தர)

ஹாஸ்பெட்	91	0	7
"லே ஹாட்"	97	13	2

கே. ஏ. மதியழகன் சுற்றுப்பயணம்

டிசம்பர்	23	கடலூர் (N.T.)
"	24	அனனியூர் (விழுப்புரம்)
"	25	பரங்கிப்பேட்டை சிதம்பரம்
"	27	விருதாசலம்
"	29	வேலூர்
"	30	வாணியம்பாடி
"	31	கிருஷ்ணகிரி
ஜனவரி	2	சேலம்
"	4	காஞ்சிபுரம்
"	5	அரக்கோணம்
"	6	சென்னை (ராபின்சன்பார்க்)
7 to 12		திருச்சி மாவட்டம்

இரும்புத் தொழிற்சாலைகள்

திருப்பிக் கொடுக்க சர்ச்சில் ஏற்பாடு

லண்டன், டிச. 21—

பிரிட்டனில் அட்லி சர்க்காரால் தேசிய மயமாக்கப்பட்டு அரசாங்கத்தினாலேயே நடத்தப்படும் இரும்புத் தொழிற்சாலைகளை முன்புபடி தனிப்பட்டவர்களுக்கு திருப்பி கொடுத்துவிட சர்ச்சில் சர்க்கார் முடிவு செய்திருப்பதை பிரிட்டிஷ் தொழிலாளர் தலைவர்கள் எதிர்த்துள்ளனர்.

பிரிட்டனில் 8 கோடி தொழிலாளர்களின் பிரதிநிதிகளாக உள்ள பலவேறு தொழிற்சங்கத் தலைவர்களும் இது பற்றி சர்ச்சிலிடம் தங்கள் அதிருப்தியை ... தெரிவித்துள்ளனர்.

பாடியாலா சமஸ்தான ராணுவம்

400 பேர் ஓடி ஒளிந்தனர்

ஏராளமான துப்பாக்கிகளை கடத்திச் சென்றுள்ளனர்

பாடியாலா, டிச 21—

பாடியாலா கிழக்குப் பஞ்சாப் சமஸ்தான யூனியன் ராணுவத்திலிருந்து 400 சிப்பாய்கள் ஓடி ஒளிந்து விட்டனர் அவர்கள் ஆயுதங்களையும் வெடிமருந்தையும் எடுத்துச் சென்றுவிட்டனர் பெப்ஸு சர்க்கார் பிரதம காரியதரிசி ஈஸ்வரன் இவ்விஷயத்தை நேற்று பத்திரிகை நிருபர்களிடம் தெரிவித்தார்.

1947-ம் வருடத்தில் சமஸ்தான யூனியனில் பிரஜைகள் ஆயுதங்களை வைத்துக் கொள்ள ... அனுமதி ... ஈஸ்வரன் ... தார்.

ஆந்திரமாகாணம் பற்றி முக்கிய அறிவிப்பு

ஆந்திர விஜயம்போது நேரு வெளியிடுவார்

இச்சாபூர் டிச 20—

மேற்கு வங்கத்திலுள்ள இச்சாபூர் பஞ்சாயத்து போர்டு அளித்த வரவேற்பு ஒன்றிற்கு ஹரிகிருஷ்ண பெஹரா பதிலளிக்கையில் பண்டித நேரு ஆந்திராவில் விஜயம் செய்யும் போது, ஆந்திர மாகாணப் பிரிவினை சம்பந்தமாக முக்கியமானதொரு அறிவிப்பை வெளியிடக் கூடும் என்று கூறினார் ஆந்திர ராஜ்யப்பற்றி ஜவஹர்லால் அசிரத்தையாக இல்லை என்றும், ஆந்திரர்களும் மற்றவர்களைப் போல சமமாகத்தான் நடத்தப்படுகிறார்களென்றும் மேலும் குறிப்பிட்டார்.

ஒரு ரூபாய்க்கு குழந்தையை விற்ற தாயார்

பஞ்சத்தின் கொடுமை

பழனி, டிச. 21—

பழனி தாலுக்கா பட்டா... அப்பாவு நாய்க்கர் மனைவி நல்லம்மாள் தன் 2 மாதக் குழந்தையை, வறுமையால் காப்பாற்ற முடியாத நிலையில் பழனி டவுன் சிதம்பரம் செட்டியார் சந்திலிருக்கும் பி ராமசாமி ஆசாரி என்பவருக்கு ஒரு ரூபாய்க்கு விற்று விட்டார்.

கிறிஸ்மஸுக்கு முன் லிபியாவுக்குச் சுதந்திரம்

லண்டன், டிச. 20—

கிறிஸ்மஸுக்கு முதல் தினமான ... யை ... பூரண அரசுரிமை ... நாடாகப் ... பிரிட்டன் ... தன் மேலதிகாரத்தைக் கைவிடும்.

நண்பன்?